பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை07 சனிக்கிழமை (22.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:358

# வன்னியில் சுகாதார நிலைமை மோசம்

# தொற்று நோய்கள் பரவும் பேராபத்து!

## ஐ.நா. அபாய எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 22

**வன்னியில் தற்போது கடும் மழை பெய்வதால் அங்குள்ள அகதிகள் தங்குமிட வசதிகள் இன்றிப் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர். மழையால் அங்கு சுகாதார நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. பல்வேறு தொற்றுநோய்கள் பரவக்கூடிய பேராபத்து நிலை காணப்படுகிறது.**

**இவ்வாறு ஐ.நா.அமைப்புகள் அபாய எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.**

ஐ.நா.தொண்டு அமைப்புக்கள் கொழும்பிலிருந்து வெளியிடும் வாராந்த அறிக்கையிலேயே இவ்வாறு வன்னி அகதிகளின் சுகாதார நிலைமைகள் தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் மிக மோசமான நிலையிலுள்ள 24 ஆயிரம் குடும்பங்களுக்கான தங்குமிடங்களை அமைப்பதற்கு உதவுமாறு முல்லைத்தீவு அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் புதிய விலை இன்று முதல் ரூபா 45

யாழ்ப்பாணம், நவ.22

குடாநாட்டில் பாணின் விலை உடனடியாக 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அரச அதிபர் கே.கணேஷ் இதனை அறிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை ஒரு கிலோ 5 ரூபா குறைக்கப்பட்டுள்ளதால் ஒரு

(14ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர் உள்ளே

க.பொ.த.ப(சா) பரீட்சை

★விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

ஆசிரியர்- அ. தயாபரன் (யாழ்.மத்திய கல்லூரி)

# வடக்கில் தொடரும் யுத்தத்தால் 55 ஆயிரம் மாணவர்கள் நிர்க்கதி!

## தமிழ்க் கூட்டமைப்பினர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 22

வடக்கில் இடம்பெறும் யுத்தம் காரணமாக அங்குள்ள 190 பாடசாலைகளைச் சேர்ந்த 55 ஆயிரம் மாணவர்கள் கல்வியை முற்றாக இழந்து அகதிகளாகியுள்ளனர் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

அந்தப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கூட்டமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சிவசக்தி ஆனந்தனே மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடக்கில் கல்வி நடவடிக்கையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. தற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 64 லொறிகளில் பொருள்கள் ஓமந்தை ஊடாக வன்னிக்கு

கொழும்பு, நவ.22

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் ஓமந்தைச் சோதனைச்சாவடி ஊடாக அங்கு சென்றடைந்தன.

உலக உணவுத் திட்டத்தினதும் அரச திணைக்களத்தினதும் உணவுப் பொருள்கள் அடங்கிய 64 லொறிகள் அங்கு சென்றன.

உலக உணவுத் திட்டத்தின் 430 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அடங்கிய 44லொறிகளும் அரச திணைக்களத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் தொலைபேசிச் சேவைகள் நேற்று மாலையிலிருந்து செயலிழந்தன

யாழ்ப்பாணம், நவ. 22

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் மற்றும் குடாநாட்டுக்குள்ளுமான தொலைபேசிச் சேவைகள் நேற்று மாலை 5.30மணியிலிருந்து செயலிழந்தன.

வன்னி ஊடான செய்மதிக் கோபுரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப இடையூறு காரணமாக சேவைகள் செயல் இழந்திருக்கலாம் எனக் கருதப்பட்டாலும்-

அதனை உறுதி செய்ய முடியவில்லை - என்று 'ரெலிகொம்' வட்டாரங்கள் தெரிவித்தன.

தொலைபேசியில் ஏற்பட்டிருக்கும் தடங்கல் காரணமாக 'இன்ரநெற்' மற்றும் ''லீஸ்லைன்'' தொடர்புகள் பாதிப்புற்றன. அதன் விளைவாக வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் செய்மதி ஊடான தொழிநுட்ப செயற்பாட்டுச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

## சீரணி அம்மன் ஆலயத்தில் கைதான ஐவர் நேற்று நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலய தேர் முட்டியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்த ஏழு பேரில் ஐவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் இவர்களை மல்லாகம் நீதிவான் ரி.பிரபாகரன் நேற்று விடுவித்தார்.

ஆலயக் குருவான நித்தியானந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசைக் கண்டித்து வன்னியில் நேற்று நான்கு பட்டினங்களில் மக்கள் பேரணி

வவுனியா,நவ.22

வன்னிக்கான உணவு, மருந்து மற்றும் எரிபொருள்களைத் தடுத்து மனித அவலத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள இலங்கை அரசைக்கண்டிக்கும் பேரணிகள் நேற்று வன்னியில் நான்கு பட்டினங்களில் இடம் பெற்றன.

தருமபுரம், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இப்பேரணிகள் நடைபெற்றன.

இப் பேரணிகளில் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கலந்துகொண்டு தமது கண்டனக் குரல்களை எழுப்பினர்.

பேரணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தொடங்கின.

இதில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு மனுக்கள் கையளிக்கப்பட்டன. கிளிநொச்சியில் தருமபுரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டன சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு தருமபுரம் பாடசாலையில் இருந்து பேரணியாகப் புறப்பட்டனர். கிளிநொச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஒத்திகையில் வெடி விபத்து 2சிப்பாய்கள் பலி; 13 பேர் படுகாயம்

### நொச்சியாகம படைமுகாமில் சம்பவம்

கொழும்பு, நவ.22

அநுராதபுரம் நொச்சியாகமவில் உள்ள லிந்தவெவ இராணுவ முகாமில் இடம்பெற்ற தவறுதலான துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர். 13 பேர் படுகாயமடைந்தனர்.

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததன் காரணமாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இராணுவ முகாமிற்குள் வீதிச் சோனைச் சாவடிகள், காவலரண்கள் என்பவற்றின் மாதிரி வடிவங்களை அமைத்துப் படையினர் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த வேளை அங்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த வேளை, இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியே வெடித் துள்ளது.

காயமடைந்த இராணுவத்தினர் நொச்சியாகம, கெக்கிராவ மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர்.

(அ-சி)

## கப்பம் கோருவோரைக் கைது செய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றனர் படையினர்

குடாநாட்டில் கப்பம் கோருபவர்களை கைது செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு பலாலி படைத் தலைமையகம் கேட்டுள்ளது.

பலாலி தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பிரதேசத்தில் திட்டமிட்டு செயற்படும் அன்பழகன் என்ற புனை பெயரில் இயங்கும் ஏமா[illegible] தொலைபேசி மூலம் மிரட்டி வியாபாரிகள் அரசாங்க ஊழியர்கள் உட்பட பல்வேறு தரப்பினர்களிடமிருந்து கப்பம் கோரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்புப் படையினருக்கு தொடர்ந்து தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இவர்களின் எதிர்பார்ப்பானது யாழ். பிரதேசத்தில் சுமுக நிலையை சீர் குலைத்து [illegible]மக்களிடம் சூறையாடக்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போரை நிறுத்தும் வரை தமிழகத்தில் எழுச்சிப் புயலாக இடி முழங்குவோம்!

## பழ.நெடுமாறன் ஆவேசம்



இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அங்கு போர் நிறுத்தம் செய்யப்படும் வரை தமிழகத்தில் தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும். புதிய எழுச்சிப் புயலுடன்- இடி மின்னலுடன் முழங்குவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

''இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என ஒட்டுமொத்த தமிழக மக்களும் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால், மத்திய அரசு அதற்கான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

இதைக் கண்டித்து வரும் 25ஆம் திகதி மாநிலம் முழுவதும், மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா.இபாண்டியன் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதில் பெரும்பாலான கட்சிகள் பங்கேற்க உள்ளன. எனது தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவும் அதில் அங்கம் வகிக்கும் 80க்கும் மேற்பட்ட தமிழ்த் தேசிய அமைப்புகளும் பங்கேற்கும். இந்த மறியலில் ஒருலடசத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பர்.

இந்தப் போராட்டத்துக்குப் பிறகும் மத்திய அரசின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படாவிட்டால் அடுத்தகட்டப் போராட்டம் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுக்கப்படும். இலங்கையில் போரை நிறுத்தும் வரை தமிழகத்தில் புயலுடன் இடிமுழங்கும் போராட்டம் தொடரும்.

தமிழகத்தில் பெரிய கட்சிகள் என கூறப்படுபவவை மக்கள் பிரச்சினைக்கான போராட்டங்களுக்கும் வருவதில்லை. காங்கிரஸ், அ.தி.முக. ஆகிய கட்சிகள் ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துள்ள கட்சிகள், அவர்கள் இந்த மறியலில் பங்கேற்பார் என எதிர்பார்க்க முடியாது- அவர்கள் பங்கேற்காதமை பற்றி யாரும் கவலைப்படவும் இல்லை- என்றார்.

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் பொங்கி எழுந்தனர் உடல் வலுக்குறைந்தோர்!

இந்திய மத்திய அரசைக் கண்டித்து ஈழத்தமிழருக்கு ஆதரவாகஉடல் வலுக்குறைந்தோர் தமிழ்நாடு எங்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் த.பிரகாஷ் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எமது யெங் இண்டியன் சொசைட்டி யின் சார்பாக உடல் ஊனமுற்றோர்கள் ஈழத்தில் போர் நிறுத்தம் மற்றும் அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வன்னி யில் அனுமதிக்கக் கோருதல் உள்ளிட்ட ஏழு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் நாடு எங்கும் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

எமது கூட்டமைப்பின் சார்பாக தமிகத்தின் தென்பகுதியில் உள்ள ஒன்பது மாவட்டங்களிலும் போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளோம்.

அதேவேளையில் சென்னையில் எதிர்வரும் சனிக்கிழமை 29 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

இதில் தமிழகம் முழுவதும் உடல் ஊனமுற்றோர்களின் சங்சங்கள் சார்பாக தமிழ் நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தென்மண்டலக் கூட்டமைப்பு போன்ற பெரிய அமைப்புக்கள் பங்கேற்க உள்ளன - என்றுள்ளது.

# ரஜனி கீதையை அவமதித்தாரா? வீட்டை முற்றுகையிட முஸ்தீபு



கோவை, நவ. 22

இந்துக்களின் புனித நூலான 'பகவத் கீதை' யின் உபதேசத்தை அவமதித்து, 'கடமையைச் செய்; பலனை எதிர்பார்' என்று பேசிய நடிகர் ரஜனியின் வீடு, டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி முற்றுகையிடப்படும்- என்று தமிழக 'யாதவ சேனா அமைப்பு' எச்சரித்துள்ளது.

நடிகர் ரஜனி கடந்த 3ஆம் திகதி, சென்னை ராகவேந்திரா மண்டபத்தில் ரசிகர்களைச் சந்தித்து கேள்விகளுக்கு பதிலளித்தார். அந்த நிகழ்சியின் போது ரசிகர்கள் மத்தியில் உரையாற்றிய ரஜனி 'கடமையைச் செய்; பலனை எதிர்பார்'- என்றார்.

அவரது பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து, திருச்சி உள்ளிட்ட இடங்களில் 'போஸ்டர்' ஒட்டப்பட்டது. இந்நிலையில், பகவத் கீதை உபதேசத்தை அவமதித்து பேசிய ரஜனி வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப் போகிறோம் என்று தமிழக யாதவ சேனா அறிவித்துள்ளது.

மேலும் , நடிகர் ரஜனி கடமை செய்; பலனை எதிர்பார் என பகவத் கீதையில் உள்ள உபதேசத்தை அவமதிக்கும் வகையில் சிரித்துப் பேசியுள்ளார். அது மட்டுமின்றி பகவத் கீதையில் உபதேசம் செய்யப்பட்டுள்ள நற்செயல் தவறானது என்றும் தெரிவித்துள்ளார். இது இந்து மதத்தினரையும் ஆழமான நம்பிக்கையும் புண்படுத்துவதாக உள்ளது.

எனவே ரஜனி இப்படிப் பேசியதற்கு பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். மாறாக அவர் மௌனம் சாதித்தால் சென்னை போயஸ் கார்டனில் உள்ள ரஜனியின் வீட்டை டிசெம்பர் 24ஆம் திகதி முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும்- என்று அறிவித்துள்ளது.

# தமிழக மீனவரை விடுவிக்க மன்மோகன் தலையிட வேண்டும் என்கிறார் தங்கபாலு

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஜெகதாப் பட்டினம் மீனவர்களை விடுவிக்க, பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாற-

இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்ற புதுக்கோட்டை மாவட்டம் ஜெக தாப்பட்டினத்தைச் சேர்ந்த 22மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென்று பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் படுகொலைக்கும், தாக்குதலுக்கும் ஆளாவது நிறுத்தப்பட வேண்டும். இப்பிரச்சினையில் பிரதமர் உடன டியாக தலையிட வேண்டும். மீனவர்கள், அவர்களது படகுகள், பிற உடமைகள் உடன டியாக விடுவிக்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளேன்- என்றுள்ளது.

# எமது இறுதி மூச்சு இருக்கும் வரை புலிகளை ஆதரித்துப் பேசுவோம்

## நாஞ்சில் சம்பத்

மதுரை, நவ. 22

தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கம் குறித்து இறுதி மூச்சு இருக்கும் வரை நாங்கள் பேசுவோம். ஈழப் போரை மத்திய அரசு அங்கீகரித்து தனி ஈழ நாடாக வாங்கித் தர வேண்டும்.

இவ்வாறு அக்கட்சியின் கொள்கைபரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் கூறினார்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து மதுரையில் நேற்ற முன்தினம் ம.தி.மு.க வினர் உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்து பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கம் குறித்து எமது மூச்சு இருக்கும் வரை நாங்கள் பேசுவோம். வைகோ விடுதலைப்புலி ஆதரவாளர் என்பதாலேயே நாம் ம.தி.மு.காவில் சேர்ந்தேன்.

நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரானவர்கள் அல்லர் ஈழப் போரை மத்திய அரசு அங்கிகரித்து தனி ஈழ நாடாக வாங்கித் தரவேண்டும். இது தொடர்பாக தமிழக சட்ட சபையிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஈழப் பிரச்சினையில் அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணியினை உடைத்து விடலாம் என கருணாநிதி நினைக்கிறார் அ.தி.மு.க உடனான எமது கூட்டணி தொடரும்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய மஹிந்தராஜபக்ஷ முன்வரவேண்டும். மறுத்தால் அந் நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும். தூதுவ உறவை முறித்து நெருக்கடிகளைக் கொடுத்தால் தான் இந்தியாவிற்கு இலங்கை பணியும்- என்றார்.

# தொடர்ந்து புலிகளை ஆதரித்துப் பேசிவரும் திருமாவளவனை கைது செய்யாதது ஏன்?

## விளக்கமளிக்கக் கோருகிறார் இளங்கோவன்

சென்னை, நவ. 22

விடுதலைப்புகளுக்கு ஆதரவாகத் தொடர்ந்து பேசி வரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவனை இதுவரை கைது செய்யாதது ஏன் என்பதற்கு தமிழக அரசு உரிய விளக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு மத்திய இணையமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கேவன் வலியுறுத்தியுள்ளார். சென்னை சத்திமூர்த்தி பவனில் அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே இதனைக் கூறினார்.

மேலும் இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை திருமாவளவன் தொடர்ந்து ஆதரித்துப் பேசி வருகிறார். விடு தலைப் புலிகளுக்கு ஆதரவாக ஆயுதமேந்திப் போராடவும் தயார் என்று திருமாவளவன் கூறுகிறார்.

அவர் மீது தேச்யப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும். அவரை இதுவரை கைது செய்யாதது ஏன் என்பதற்கு தமிழக அரசு உரிய விளக்கமளிக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் தொடர்வது கண்டனத்துக்குரியது. ஆனால் மீனவர்கள் என்ற பெயரில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுகிறது எனக் கூறப்படுகிறது. இதுவும் பிரச்சினைக்குக் காரணம்.

2011 ஆம் ஆண்டு தமிகத்தில் காங்கிரஸ் கட்சித் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு கூறியுள்ளமை வரவேற்கத்தக்கது - என்றார்.


**விற்பனைக்கு**

நகைக்கடைக்குரியஅதி நவீன பிற்றிங் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-T.P 021 222 7811

**நாய்க் குட்டி விற்பனைக்கு**

கொக்கர் ஸ்பனியல் (COKER SPANIEL) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
சத்தியகுமாரன் (காந்தி)
99, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். H.P 0775150619

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் கோழி சுத்தம் செய்து குறைந்த விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம்.
''சண்பாயாம் செவிறரி''
அருணா பேக்கரி அருகில்,
நாவற்குழிச் சந்தி.
(79985)

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் செவிறரி
19, முருகேசர் லேன், நல்லூர்.

**விற்பனைக்கு**

KINETIC, CC 100 நம்பர் பதியப்படாத சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 234, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீலங்கா புத்தகசாலை)

**தவறிவிட்டது**

சாவகச்சேரி கச்சாய் வீதி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த வல்லி செபமாலை அல்லது சிவகாமி என்பவரது 466903728V இலக்க தேசிய அடையாள அட்டை கடந்த 15ஆம் திகதி (15.11.2008) சாவகச் சேரியிலிருந்து யாழ்ப்பாணம் [illegible] கண்டெடுத்தவர்கள் [illegible] முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

**ENGLISH & SINHALA**
**(* Personal Classes)**

இரு மொழிகளும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களும் மற்றும் அரசாங்க சேவையாளர் உட்பட எவ்வயதினரும் இணைந்துகொள்ளலாம்.
T.SAGATHEVAN, B.A.London.
Trilingual Tutor/Translator (PVT)
46, Pirappankulam Lane,
Vannarpannai, Jaffna. T.P:- 222 3520
(80070)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகாமசுந்தரிஅம்மா வாஞ்சிநாதஐயர்

திருமதி சிவகாமிசுந்தரிஅம்மா வாஞ்சிநாதஐயர் நேற்று (21.11.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 8ஆம் கட்டை ஸ்ரீனிவாச இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் தெல்லிப்பழை, கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அகிலேஸ்வரக்குருக்கள்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

தகவல்:
பிள்ளைகள், நேசன் ஐயா, ரமனி ஐயா,
ரவி ஐயா, அகிலேஸ்வரக்குரு,
திருமதி மீரா அம்மா.

## கந்தையா ஐயாத்துரை



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் தற்போது அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஐயாத்துரை நேற்று (21.11.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிறிதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆசைமுத்து தம்பதியினரின் [illegible] மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்ராசு, செல்லத்துரை மற்றும் பொன்னம்மா, பாலசிங்கம், சின்னத்துரை, இராசையா, கந்தசாமி, கனகம்மா, ராணி ஆகியோரின் சகோதரனும், புஸ்பலதா, வசந்தகுமார் (London), உதயகுமார் (France), சிவகுமார் (வேலணைப் பிரதேச செயல கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராமச்சந்திரன், கோமதி, உஷா, ஜெயஈஸ்வரி (தபாற் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் சோபிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அஸ்விந்தன், அஸ்வினி, பிரவிந்தன், உதயங்கா, உதயவேனு, அனோஜ், அபிநயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2008) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 12/9, புது வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். T.P.0602210085

தகவல்:
ஐ.சிவகுமார் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கைக்கு எட்டியும் வாய்க்குக் கிட்டாத இந்தியாவின் நிவாரணப் பொருள்கள்

யுத்தப் பேரவலத்தில் சிக்கி, சொல்லொணா துன்ப துயரங்களுக்குள் ஆழந்து கிடக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கான நிவாரண மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கை 'சாமி வரம் கொடுத்தும் பூசாரி இடம் கொடுக்காத மாதிரியான' முட்டுக்கட்டைகளினால் முடங்கிப் போய்விடுமோ என்ற சந்தேகம் உருவாகியுள்ளது.

கொழும்பு அரசு யுத்தவெறி தீவிரத்தோடு தொடுத்திருக்கும் கொடூரப் போரில் சிக்கி, நாதியற்று அல்லலாடும் ஈழத் தமிழர்களின் நிலை கண்டு தமிழகம் கொதித்து எழுந்துள்ளது. ஈழத் தமிழர்களுக்காக தமிழகம் விஸ்வரூபம் எடுத்து கிளர்ந்ததை அடுத்து , ஈழ மண்ணில் அந்தரிக்கும் மக்களுக்கு நிவாரணம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையாவது விரைந்து அனுப்பி வைத்து அவர்களின் வேதனையைச் சற்றேனும் குறைக்கும் நடவடிக்கையில் தன்னை ஈடு படுத்த வேண்டிய கட்டாயம் இந்தியமத்திய அரசுக்கு நேர்ந்தது.

யுத்தத்தினால் அவலப்படும் மக்களுக்கான உதவி என்ற பெயரில் உலக நாடுகளிடம் இருந்தும் சர்வதேச சமூகத்திடம் இருந்தும் திரட்டப்படும் வளங்கள் அதே யுத்தத்துக்காகத் திருப்பப்படும் அபத்த நிலைமை இலங்கையில் நிலவுவது, சர்வதேச தரப்புக்கு புதிய விடயமல்ல, நன்கு அறியப்பட்ட விவகாரமே.

எனவே, யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான நிவாரண உதவி பொருள்கள் என்றதும், அவை இடையில் வேறு தரப்புகளின் கைகளில் சிக்காமல் இருப்பதையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கே அவை விநியோகிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக அந்த வழங்கல் பொறுப்பை இந்தியா, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நேரடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, காரியத்தை ஒப்படைத்தது.

அத்தகைய முடிவை எடுத்து இந்திய ஆளும் தரப்பு அப்படிப் பொருள்களை விநியோகிக்கும் திட்டத்தை இலங்கை ஆட்சிப் பீடத்திடம் நிபந்தனையாக முன் வைத்து அங்கீகாரமும் அனுமதியும் பெற்றுக்கொண்டது.

அதையடுத்தே ஆயிரத்து 700 தொன் நிவாரண மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இந்தியா கப்பலில் கொழும்புக்கு அனுப்பி வைத்தது.

அந்தப்பொருள்கள் இந்தியாவில் இருந்து புறப்பட்டதும், வன்னி மண்ணில் அந்தரிக்கும் தமிழர்களின் அன்றாட வயிற்றுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வுவேனும் கிட்டும் என்ற நம்பிக்கை உருவானது.

ஆனால், இவ்விடயத்தை ஒட்டி இப்போது கட்ட விழும் சம்பவங்கள் அந்த நம்பிக்கையில் மண் விழுந்து விட்டதை உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவின் உதவிப் பொருள்கள் அந்த நாட்டில் இருந்து புறப்பட்டதுமே, வவுனியா ஊடாக வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் ஓமந்தைப் பாதைக்கு மூடு விழா நடத்தப்பட்டது.

அந்தப் பாதை நேற்றுப் பயன்படுத்தப்பட்டாலும் அது தொடர்ந்து பயன்படுத்தப்படும் சாத்தியம் தென்படவே இல்லை.வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு செல்வதற்கான புதிய பாதை ஒன்றை திறப்பது குறித்து இப்போது கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெற்று வருகின்றன.

அத்தகைய புதிய பாதைக்கான இணக்கம் எட்டப்படுவதும் -

அல்லது, ஓமந்தை ஊடான போக்குவரத்துப் பாதையை தொடர்ந்து திறப்பதற்கான இணக்க நிலையும் -

இப்போதைக்கு நேர்வதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக இல்லை.

இதற்குள் இந்தியா அனுப்பிய நிவாரணப் பொருள்களை வன்னி மக்களுக்கு விநியோகிக்கும் பொறுப்பை அந்தந்த மாவட்ட அரச அதிபர்களே, அரசின் சார்பில் முன்னெடுப்பார்கள் என்று இலங்கையின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கூறுகின்றார்.

அதுவும் இந்தப் பொருள்களை கொழும்பில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் இந்தியத் தூதுவர் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கின்ற வைபவத்தில் வைத்தே அரசின் உயர் அதிகாரி ஒருவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவோ, தன்னால் வன்னியில் இனங்காணப்பட்டுள்ள சுமார் இருபத்தையாயிரம் குடும்பங்களுக்கு இந்தப் பொருள்களைத் தானே நேரடியாக வழங்கும் என்று அடித்துக் கூறுகின்றது.

ஆக, இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள்களை யார் பொறுப்பேற்று ஈழத் தமிழருக்கு வழங்குவது என்பதிலும்-

இப்பொருள்களை வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு எப்படி எடுத்துச் செல்வது என்பதிலும்-

பெரும் இழுபறிகளும், முட்டுக்கட்டைகளும் நீடிக்கின்றன.

இந்த நெருக்கடிகள்,இழுபறிகள் இப்பொருள்கள் வன்னியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விரைந்து விநியோகிக்கப்படுவது துர்லபமே என்பதைக் கோடிகாட்டுகின்றன.

வன்னி மக்களுக்கு இந்தியா அனுப்பியுள்ள நிவாரணப் பொருள்கள், கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத மாதிரி, கொழும்பை வந்தடைந்தும் வன்னி மக்களுக்கு கிட்டாமல் சீரழியப் போகின்றனவா என்பது தான் இப்போதைய கேள்வியாகும்.



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் செ.இளங்கோ, பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சகாதேவன் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவன் ஒருவனுக்கு பதக்கம் சூட் டுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## மிருசுவில் பகுதியில் ஷெல் வீச்சில் இரண்டு வீடுகள் தரைமட்டமாகின

யாழ்ப்பாணம், நவ.22

மிருசுவில் பகுதியில் இரண்டு வீடுகள் ஷெல் வீச்சுக்கு இலக்காகி தரைமட்டமாகியுள்ளன.

மிருசுவில் பிரதேச வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள வீதியில் கடந்த திங்கட்கிழமை இரவும் செவ்வாய்க்கிழமை அதிகாலையும் வீழ்ந்த ஷெல்களால் இவ் வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் ஒரு வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இவ்வாரம் குடியேற விருந்ததாகவும் மற்றைய வீட்டின் விறாந்தையில் வீட்டுக்காரர் படுத்திருந்ததாகவும் ஷெல் (சுவாமி அறை) வீழ்ந்து வெடித்ததால் வீட்டுக்காரருக்கு பாதிப்பு ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

(50 - 2

## வன்னியிலிருந்து வந்த மேலும் 16 பேர் குருநகர் அகதி முகாமில் தங்க வைப்பு

யாழ்ப்பாணம், நவ.22

வன்னியிலிருந்து மேலும் 16 பேர் நேற்று வெள்ளிக்கிழமை கேரதீவுக்கு வந்துள்ளனர்.

பரந்தன், உமையாள்புரத்திலிருந்து புறப்பட்ட அவர்கள் நேற்று அதிகாலை கேரதீவுக்கு வந்துள்ளனர். உமையாள்புரம், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பெண்கள், ஆறு ஆண்கள், நான்கு சிறுவர்கள், 2கைக்குழந்தைகள் ஆகிய 16 பேரும் கேரதீவில் உள்ள படையினரால் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தப் 16 பேரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களை யாழ். பிரதேச செயலரின் பொறுப்பில் குருநகர் அகதி முகாமில் தங்க வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (50-207)

## சத்திய சாயி பாபாவின் அவதார தின விழா

யாழ்ப்பாணம், நவ.22

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 83ஆவது அவதாரதின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வு 7.30 மணிக்கும், பிற்பகல் நிகழ்வு 3 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (204)

* * *

நவாலி, நவ.22

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 83ஆவது அவதார தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் கனகசபை வீதியிலுள்ள சர்வமத தேவஸ்தானத்தில் லீலா கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயக்குமாரும், கௌரவவிருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி எஸ்.ரட்ணசிங்கமும்கலந்து கொள்வர். (202-100)

## நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

வடமாகாணத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு நியம னக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜெயந்திபுர, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் உப செயலகத்தில் நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது. (202)

## மானிய விலையில் கோழிக் குஞ்சுகள்

கோப்பாய், நவ.22

கோப்பாய் கால்நடை வைத்திய அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை கர்லை நல்லினக் கோழிக் குஞ்சுகள் மானிய விலையில் விநியோகிக்கப்படவுள்ளன. (202-72)

## மாணவர்களுக்கு பாராட்டும் பெற்றோர் தின விழாவும்

யாழ்ப்பாணம், நவ.22

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கான பாராட்டு விழாவும் பெற்றோர் தின விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மரியமலர் ஜோசப் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்த் துறை) திருமதி மீரா அருள்நேசன், நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி கே.வி.குணசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத் தந்தை ஏ.லோறன்ஸ் அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## புதிய கல்வியாண்டில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்க நடவடிக்கை

கொழும்பு, நவ.22

புதிய கல்வியாண்டில்- 2009ஆம் ஆண்டு- தரம் ஒன்றுக்கு மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன்படி, தரம் ஒன்றில் மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி இடம்பெறுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், குறித்த மாணவர்களின் தகவல்களைப் பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண் டார தெரிவித்துள்ளார். (202)

## 'கிரடிட் கார்ட்' மோசடியில் 7 இலங்கையர் சிங்கப்பூரில் கைது

'கிரடிட் கார்ட்' (கடன் அட்டை) மோசடி தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த ஏழு பேர் சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூர் குடிவரவு, குடியகல்வு திணைக்களமும் வர்த்தகர் நுகர்வோர் திணைக்களமும் இணைந்து நடத்திய சோதனையின் போதே இவர்கள் ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர்.

போலியான முறையில் 'கிரடிட் கார்ட்' களை அச்சடித்து அதன் மூலம் பொருள்களைக் கொள்வனவு செய்து 20,000 ஸ்ரேலிங் பவுண்களை இவர்கள் மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (202)

## குடாநாட்டில் மண்எண்ணெய்யின் பாவனை அதிகரித்துள்ளது

யாழ்.ப்பாணம், நவ.22

குடாநாட்டில் மண்எண்ணெய்யின் பாவனை திடீரென அதிகரித்துள்ளது.

பொதுமக்கள்தமது சமையல் தேவை மற்றும் விவசாய நடவடிக்கைக்கும் மண்எண்ணெய்யை பயன்படுத்துவது கடந்த வாரத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்எண்ணெய்யின் விலை 20 ரூபா வால் குறைப்பு செய்யப்பட்டதே இதன் பாவனை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

விறகின் விலை தற்போது அதிகரித்துள்ளதால் நுகர்வோர் தமது சமையல் தேவைக்கு மண்எண்ணெய் அடுப்புகளையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன், மண்எண்ணெய் விலை குறைப்பைப்பயடுத்து விவசாய நடவடிக்கையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. (202-224)

### நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 08: 23.11.2008 | |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.இ.06.18 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | பி.இ.01.49 வரை |
| சுபநேரம்: | 09.11 - 10.11 |
| ராகுகாலம்: | 04.41 - 06.11 |

## மட்டுவில் சாந்தநாயகியில் சமையலறை திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட சமயலறை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், உலக உணவுத் திட்ட நிறுவன இலங்கை தலைமை அலுவலகப் பிரதிநிதி பிரான்சிஸ் ஆகியோரால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது என வித்தியாலய அதிபர் திருமதி வி. வைகுந்தவாசன் தெரிவித்தார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நிவாரணப் பொருள் விநியோகம்: ஐ.சி.ஆர்.சி மேற்கொள்வதில் பெருமகிழ்ச்சி

கொழும்பு, நவ.22

வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்கென அன்பளிப்புகளை செஞ்சிலுவைச்சர்வதேச குழு ஊடாக வழங்க இந்திய அரசு முன்வந்திருப்பதானது தமது அமைப்பின் நடுவுநிலையையும் சுயாதீனத்தையும் மோதல்கள் இடம்பெறும் இடங்களில் உதவிகளை விநியோகிப்பதில் தமக்குள்ள நிபுணத்துவத்தையும் இந்தியா அங்கீகரிக்கின்றது என்பதை தெளிவாக்குகின்றது.இது மிகுந்த ஊக்கத்தை வழங்கியுள்ளது.

இவ்வாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுதான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதுமேலும் தெரிவித் திருப்பதாவது:

மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்கென 80 ஆயிரம் குடும்பப் பொதிகளை செஞ் சிலுவை சர்வதேச குழு இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ளது. இந்தப் பொதிகளில் 1700 தொன் சுகாதாரப் பொருள்களும் உடுபுடைவைகளும் உணவுப் பொருள்களும் உள்ளன. பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளுக்கு இந்தப் பொருள்கள் மூன்று, நான்கு வாரங்களுக்குப் போதுமானவை.

வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் ஐ.சி. ஆர்.சி. நேரடியாக இந்தப் பொருள்களை விநியோகம் செய்யும். மக்களின் தேவைகளை எமது சொந்த கணிப்பீடுகளின் அடிப்படையில் நாம் முடிவுசெய்வோம்.

புதுடில்லியில் உள்ள பிராந்திய பேராளர் குழுவின் தலைவர் பிரான்கொயிஸ் ஸ்டாம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அரசு வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக நிவாரணப் பொருள்களை தங்கள் அமைப்பிடம் வழங்கியுள்ளமைக்காகவும், அப்பொருள்களை வன்னிக்கு எடுத்துச் சென்று வழங்க இலங்கை அரசு அனுமதியளித்திருப்பதற்காகவும் ஐ.சி. ஆர்.சி. இரு அரசுகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

வன்னிமக்களுக்கு உணவு, இருப்பிடம், தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளே மிகவும் அத்தியாவசியமான தேவைகளாக இருக்கின்றன. அந்த மக்களின் சில அடிப்படைத் தேவைகளுக்கு இப்பொருள்கள் உதவியாக இருக்கும். அடுத்துவரும் நாள்களில் அப்பொருள்களைக் கொண்டு சென்று அம்மக்களுக்கு நாம் விநியோகிப்போம் என்று அவ்வமைப்பு தான் வெளியிட்டுள்ள இன்னொரு அறிக்கையில் தெரிவித்து ள்ளது. (ப)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கான நவம்பர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களை அடுத்த வாரத்தில் இருந்து விநியோகிக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந் நிவாரணத்திற்குரிய அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

அதேசமயம் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (202-224)

## சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி சாவகச்சேரியில் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.22

சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் விசேட விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

அதன் ஓர் அங்கமாகப் பிரதேச பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பான முன்னறிவினை மதிப்பிட வினா விடைப் போட்டியை நடத்தவுள்ளனர்.

வினாக் கொத் துக்கள் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவை ஊடாக வழங்கப்பட்டுள்ளன. பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிடைக்கக் கூடிய வகையில் தத்தமது பிரிவுப் பொது சுகாதார பரிசோதகர் அல்லது குடும்ப நல உத்தியோகத்தர் ஆகியோரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சரியான விடை எழுதும் 13 பேருக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.22

சாவகச்சேரி நகர சபையின் நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபைக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறுமென நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (202-207)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.22

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் கல்வித்தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வட்டு. இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் ச.இராமலிங்கமும் பாரியாரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ ச.சுந்தரராசக் குருக்கள், மூளாய் தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு ரி.எஸ்.யோசுவா ஆகியோர் ஆசியுரையை நிகழ்த்துவர்.

வாழ்த்துரையை வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்புரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளையும் ஆற்றவுள்ளனர். (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.22

ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு இன்று சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (204)

## வடமராட்சிப் பாடசாலைகளின் ஆண்டிறுதிப் பரீட்சை

வடமராட்சி, நவ.22

வடமராட்சிவலயப் பாடசாலைகளின் ஆண்டிறுதிப் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி அடுத்த மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் எனவடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) சி.புஸ்பலிங்கம் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார். (202-236)


## பிறந்ததின வாழ்த்துகளும் பாராட்டுகளும்



புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த வேலழகன்-ஜானகி தம்பதியரின் செல்வப் புதல்வன்

பிரவீன்

இன்று (22.11.2008) சனிக்கிழமை 10ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் கொண்டாடுவதுடன், 2008ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகவும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குன்றென நிமிர்ந்து நீவிர்
குவலயம் புகழ வாழ
இறைவன் அருளுடன்
வாழ்த்தி மகிழ்கிறோம்.

அன்புடன் வாழ்த்தும்:
திருமதி கணேசு அன்னபூரணம் (அப்பம்மா).

நவரட்ணராஜா வீதி, கோண்டாவில். (80076)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் நவராசன் தினேஷ்ராஜ்

இவர் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2008) 137 புள்ளிகளைப் பெற்று இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்.



செல்வி அபிராமி யோகச்சந்திரன்

இவர் ஓகஸ்ட் 2008இல் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்ட சர்வதேச ஆங்கில மொழி மூல கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் கணிதப் பிரிவில் நான்காம் இடத்தைப்பெற்று தேசிய மட்டப் பரீட்சைக்குத் தெரிவாகி அப்பரீட்சையில் பங்குபற்றியமைக்காக கல்வி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த அவர்களால் வழங்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றவர்.



செல்வன் சண்முகநாதன் வசீஹரன்

இவர் 2008இல் நடத்தப்பட்ட 19 வயதுப்பிரிவுக்குரிய ஈட்டி எறிதல் போட்டியில் மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்றவர்.

எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மேற்படி மாணவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்கள் மேலும் பல வெற்றிகளைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

## BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வங்கி

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 28.02.2008 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 28.08.2007இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை | |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை |
| காரைநகர் | யாழ்ப்பாணம் |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற்கிளை உட்பட) | 2008 நவம்பர் 29ஆம் திகதி (சனி) |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | காலை 9.30 மணிக்கு |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (வேலணை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

இந்த ஏலவிற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர்,
(இலங்கை வங்கி வடபிராந்தியம்),
உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:. 021 222 3126
021 222 2735

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




செல்வி அபிராமி நவரட்ணராஜ்

நவரட்ணராஜ் - விஜயலதா தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (22.11.2008) சனிக்கிழமை திருகோணமலையில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை பெரியநாச்சி அம்மன் துணையில் எல்லாச் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துவோர் :

அம்மப்பா, அம்மம்மா, அன்ரா, மாமா, பூட்டி, அப்பம்மா.

புதுவளவு, இடைக்காடு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மண்மூடும் சுவடுகள்....!

— ந.சத்தியபாலன்

"மாமா உங்கள ஆரோ தேடுகினம்..." மருமகன் சுதனின் குரல் கிணற்றடியில் நிற்கும் என் காதில் அறைகிறது. யார் வந்தாலும் இருக்கச் சொல்லிவிட்டு என்னிடம் வந்து தகவலைச் சொல்லவேண்டும் என்று எத்தனையோ தடவைகள் சொல்லி வைத்திருக்கின்றபோதும், யாராவது வரும் சந்தர்ப்பங்களில் தலை வாசலில் நின்றபடியே உரத்துக் குரல் வைப்பது அவனுக்கு வழக்கமாகிப்போய்விட்டது. 'யாராய் இருக்கும்?' என்று யோசித்தபடியே வாசலுக்குப் போனேன். வாசற் கதவோடு நின்ற மனிதனை என்னால் உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை.

"என்ன சதானந்தன், என்னை அடையாளம் தெரியேல்லையா?" என்று கேட்டுச் சிரித்தபிறகுதான், அது குலம் அண்ணை என்று தெரிகிறது. "எட.. எங்கட குலம் அண்ணையே. அடையாளமே தெரியேல்லை அண்ணை. நல்லா மெலிஞ்சு போய் தாடி மீசையோட ஆரோ போல கிடக்கு. உங்கட குரலைக் கொண்டுதான் இப்ப கண்டுபிடிச்சனான்.. உள்ளுக்க வாங்கோ. எவ்வளவு காலம் உங்களைக் கண்டு...? எப்ப வந்தனீங்கள் கொடிகாமத்தால...?" எல்லாவற்றுக்கும் ஒரு பலத்த சிரிப்பைப் பதிலாக்கி உள்ளே வருகிறார், 'குலம் அண்ணை' என்று எங்களால் நீண்டகாலமாய் அழைக்கப்பட்ட குலசபாநாதன். எனது சின்னண்ணரின் பள்ளித்தோழர். நெடுங்காலமாக வீட்டுக்கு வந்து பழகியதில் எல்லோருக்கும் ஒரு நல்ல சிநேகிதனாய் இருந்தவர் அவர்.

"இப்ப ஒரு அவசர அலுவலும் இல்லைத்தானே உமக்கு? நான் வந்ததால ஏதும் வேலை கெட்டுப் போச்சோ...?" வழக்கம் போல எச்சரிக்கையோடு - ஒரு தயக்கத் தொனியில் - கேட்கிறார். "சீச்சீ! அப்பிடியொண்டும் இல்லை. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? சும்மா தோட்டத்தில பொழுதுபோக வேலை செய்து கொண்டு தான் நிக்கிறன்"

அவரது தயக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

"அப்ப சரி! என்னோட ரெண்டொரு மணித்தியாலம் செலவழிக்க வேணும். கன நாளைக்குப் பிறகு இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். பழைய சிநேகிதர் கனபேரைச் சந்திக்க முடியேல்ல. உம்மட அண்ணரும் கொழும்போட போயிற்றார் எண்டு அறிஞ்சன். நீரும் எனக்கொரு சிநே கிதன் தானே... உம்மோடையும் கொஞ்ச நேரத்தைக் கழிப்பமே எண்டு தான் வந்தனான்"

"ஓ... தாராளமா அண்ணை. உங்களைக் கண்டது உண்மையில சந்தோஷமாயிருக்கு. அம்மா கண்டா வெண்டால் இன்னும் சந்தோஷப்படுவா. உங்களில அவவுக்குச் சரியான பாசமெல்லே."

"ஓமோம் சதா! நான் ஒண்டையும் மறக்கேல்ல. உங்கட அம்மாவின்ர அன்பை என்னால ஒருநாளும் மறக்க ஏலாது. அவா இப்ப போய் நாலு வருஷம் இருக்குமா?"

"இல்லையண்ணை. வாற மார்கழியோட அம்மா போய் ஆறு வருஷம் முடியுது..." சாதாரணமாகச் சொல்ல முனைந்தபோதும் பேசிக்கொண்டே போகையில் குரல் கொஞ்சம் தளம்பிப் போகிறது.

இருவருக்கிடையிலும் சில நிமிடங்கள் மௌனம் திரையிடுகிறது. குலம் அண்ணரும் பழைய ஞாபகங்களில் சிக்கிப் போயிருக்கவேண்டும்.

தொண்டையைச் செருமிக்கொண்டு குலமண்ணை பேச்சைத் தொடர்கிறார். "பவானந்தனிட்ட வந்தால் கதைக்கிறதை விட பாடுகிறதிலதான் எங்கட பொழுது கழியும். உம்மட அண்ணைக்கு அப்பிடி ஒரு குரல் தம்பி! கணீரெண்டு, சீர்காழி மாதிரி!"

"ஏனண்ணை உங்கட குரல் ஸ்ரீநிவாஸ் மாதிரி எண்டு சொல்லுறவங்களெல்லே. அந்தக் குரலும் மறக்கேல்ல. பாட்டுகளும் மறக்கேல்ல அண்ணை."

"ஓ! உமக்கு அதெல்லாம் நினைவில இருக்கா? பழைய பாட்டுகள் இப்பவும் கேக்கிறனீரா?"

"ரெண்டு மூண்டு சி.டியில பி.பி.ஸ்ரீநிவாஸ், ஏ.எம் ராஜா, பி.சுசிலா இவையின்ர பாட்டுகள் தான் வைச்சிருக்கிறன். பல சந்தர்ப்பங்களில அந்தப் பாட்டுகள் பெரிய ஆறுதலா இருக்குதண்ணை"

"அப்பிடியா? கேக்கிறதுக்குச் சந்தோஷமாக இருக்கு. என்ர பழைய சேகரமெல்லாம் கனக்கத் தவறிப் போச்சு. ஒண்டு, ரண்டு கசெற்றுகள்தான் கிடக்கு. பி.பியின்ர எல்லாப் பாட்டும் கிடைச்சுதா உமக்கு?" என்று மகிழ்ச்சியான குரலில் கேட்கிறார்.

"மணமாலைப் படத்தில பி.பி.பாடுற 'நெஞ்சம் அலைமோதவே...' பாதை தெரியுது பார் படத்தில 'சிட்டுக்குருவி பாடுது...' இதுகள் கிடைக்கேல்ல."

"ஓமோம் 'நெஞ்சம் அலைமோதவே..' ஒரு அற்புதமான பாட்டெல்லோ? எங்கட வில்வண்ணை (கவிஞர் சு.வி.) அதை நல்லாப் பாடுவார்"

"ஓமோம் எனக்கும் ஞாபகமிருக்கு. அந்தக் குரல் அவருக்கு நல்லா வரும்"

"நீங்களும் பாடுவீங்கள்தானே?"

"நானும் பாடுறனான்தான். எனக்கு ஏ.எம்.ராஜாவில இன்னுமொரு படி கூடப் பிடிக்கும்."

"ஒரு பாட்டுப் பாடுங்கோ குலமண்ணை." சின்னச்சிரிப்போடு குலமண்ணை தொடங்குகிறார்.

"காரிருள் நேரம். சாலையோ தூரம்.
கண்ணீர் பாரம் நெஞ்சிலே..."

தன்னை மறந்து பாடும் அந்த மென்குரல் உள்ளேயிருந்த எனது வீட்டாரை ஈர்த்திருக்கவேண்டும். மெல்லமெல்ல ஒவ்வொருவராய் அவ்விடத்துக்கு வருகிறார்கள்.

அங்கே வந்த எனது மகனிடம், "எட உனக்கும் இந்தப் பாட்டு பிடிக்குதாடா? உன்ர பாட்டுகள் மாதிரி இல்லையே இது!" என என் மனைவி மெல்லிய தொனியில் கிண்டல் செய்கிறாள்.

"சும்மா இருங்கோம்மா! குழப்பாதேயுங்கோ. நல்லா இருக்கு, மாமான்ர குரல்." அவனும் மெய்மறந்து நிற்கிறான்.

*(இன்னும் சுவடுகள் பதியும்...)*

# வார வசந்தம்

# அன்னை

போ.சத்தியன்

சிறுவர் கதைகள் 07

செல்வி அன்பும், அழகும், அளப்பரிய அறிவும் கொண்ட அருமையான சிறுமி. செல்வியின் தந்தையார் வெகுதொலைவிலிருந்த நகரமொன்றில் வேலை செய்து வந்தார். வார இறுதி நாள்களில் மட்டுமே வீடு வந்திடுவார். தந்தையார் வீட்டிலிருக்கும் நாள்களில் செல்வியின் வேலைப்பழு சிறிது குறைந்திடும். தாயாரைக் கவனிப்பதிலும், சமையல் வேலைகளைப் பார்ப்பதிலும் தந்தையார் மூழ்கிக்கொள்ள, வீட்டுப்பாடங்களை எழுதுவதிலும், பாடல்கள், கவிதைகள் வரைவதிலும், பூச்செடிகளை நாட்டி மகிழ்வதிலும் செல்வி நேரத்தைக் கழித்திருப்பாள்.

ஞாயிறு மாலையில் ரயில் வண்டி ஏறி மீண்டும் வேலைக்குப் பயணப்படும் தந்தையாரைக் கலங்கும் கண்களுடன் வழி அனுப்பிடுவாள் செல்வி. அப்பா வீட்டிலிருக் கும்போது அயலவர்களும் சரி, உறவினர்களும் சரி தங்கள் மூக்கை இங்கு நுழைப்பதில்லை. அப்பாவின் கண்டிப்பான குணம் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அம்மாவின் அருகே அமர்ந்து அவர் முகத்தையே பார்த்து தன்னை மறந்திருந்த செல்வியின் சிந்தனையைக் கலைத்தது, சமையலறையில் கேட்டதொரு சத்தம். அறையிலிருந்தும் விரைந்து சமையலறைக்கு வந்தாள். பால் பானையின் மூடியைத் தட்டித் திறந்து, பாலை சுவை பார்த்திடும் தருணத்தில் அங்கு செல்வி வந்ததால் கோபமும், திகிலும் கொண்டதொரு குட்டிப் பூனையார், செல்வியை முறைத்துப் பார்த்துவிட்டு யன்னல் வழியாக வெளியே குதித்து ஓட்டம் பிடித்தார். பூனைக்குட்டியாரின் செயலைக் கண்டு சிரித்துக்கொண்டே, அணைந்திருந்த அடுப்பை ஊதி எரியச் செய்தாள் செல்வி. மணி ஏழரை. வேகவேகமாய் பால் கஞ்சி தயாரித்துமுடித்த செல்வி, தாயாரை மெதுவாய் எழுப்பி அவருக்குக் கஞ் சியை ஊட்டினாள். காலையில் தினமும் அம்மாவுக்குப் பால்கஞ்சியும், மாத்திரைகளும் கொடுத்துவிட்டுத்தான் பாடசாலை செல்வாள் செல்வி. பாடசாலை முடிந்து அவள் வீடு திரும்பிய பின்னரும் மாத்திரைகளின் வசப்பட்டுத் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருப்பார் அம்மா.



வார இறுதி நாள்களில் வரும்போது தவறாது அப்பா வாங்கிவரும் ஜாம் போத்தல்கள் எப்போதுமே வீட்டிலிருப்பதால், பாண் துண்டுகளுடன் தனது பசியைப் போக்கிக்கொள்வது செல்வியின் வழக்கமாகும். வேகவேகமாய் ஜாம் பூசிய இரண்டு பாண் துண்டுகளை எடுத்துச் சாப்பாட்டுப் பெட்டியிலே வைத்துக்கொண்டு, புத்தகப் பையையும் தோளிலே மாட்டிக்கொண்டு பாடசாலைக்கு விரைந்து ஓடினாள் செல்வி.

வகுப்பிலே எப்போதும் முதலாவது மாணவி செல்விதான். நோயாளித் தாயாரின் அருகிலும், தொல்லைதரும் உறவினர்கள் மத்தியிலும், கேலி பேசிடும் அயலவர்களின் முன்னிலும் தனது மனத்தைரியத்தை இழந்திடாமல் சிறப்பாகப் படித்தாள் செல்வி. செல்வியின் ஆசிரியர்கள் எல்லோருமே அவள்மேல் மிகுந்த அன்பு செலுத்தினார்கள். ஓர் இலட்சியச் சிறுமியாய் அவளை உதாரணம் காட்டி மற்றைய மாணவிகளுக்குப் புத்தி சொன்னார்கள். அந்தவேளைகளில் அவளது வகுப்புச் சிநேகிதிகள் பலரது கண்களிலும் பொறாமை என்னும் புயல் குமுறி வீசிடும். எனினும் நல்ல மனம் கொண்ட சில சிநேகிதிகளையும் கொண்டிருந்தாள் செல்வி. நடந்துமுடிந்த பரீட்சைகளிலெல்லாம் சிறப்பாய்த் தேறி முதலிடம் பெற்றிருந்தாள் செல்வி.

நாளைக்குப் பரிசளிப்பு விழா என்பதை மீண்டுமொரு முறை நினைவுபடுத்தினார் வகுப்பாசிரியை. அவ்விழாவிற்குச் சுத்தமான சீருடைகளையும், நல்ல சப்பாத்துகளையும் அணிந்து வந்திடவேண்டும் என்று வகுப்பாசிரியை கண்டிப்பாகச் சொன்னார். பெரிய பெரிய பிரமுகர்களெல்லாம் நாளை நடக்கப்போகும் விழாவிலே கலந்துகொள்ள இருப்பதால் ஆசிரியர்களெல்லாம் பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடி விழாவுக்கான ஆயத்தவேலைகளில் மூழ்கியிருந்தார்கள்.

*[அடுத்தவாரமும் அன்னை வருவாள்...]*

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

கோகுலராகவன்



ஒருநாள் எனது பாடசாலையில் இருந்து அயற்பாடசாலை ஒன்றிற்குத் தமிழ்த்தினப் போட்டியில் பங்குபெறச் சென்றுகொண்டிருந்தேன். மிகவும் குறுகலான பாதை. இருபுறமும் கிஞ்ஞா பற்றைகளில் பூவாசம் கிளம்பி வந்துகொண்டிருந்தது.

பாதையின் வளைவில் திரும்பியபோது எனக்கு முன்பாக சைக்கிளில் பின்பக்கம் நன்கு வாட்டிய பன்றியைக் கட்டிக்கொண்டு ஓர் இளைஞன் செல்வதைக் காண முடிந்தது. பன்றி அப்போதுதான் உரித்து வாட்டப்பட்டதாக இருக்கவேண்டும்.

இறைச்சி விற்பதற்குச் செல்கிறான். 'இறைச்சி வாங்குவமா?' என்று யோசித்தேன். வாங்கி வீட்டை கொண்டு போக நீண்ட நேரம் எடுக்கும். அது சாத்தியப்படாது.

அந்த இளைஞனை விலத்தும்போது கடைக்கண்ணால் ஆளைப் பார்த்தேன். இவன் கமலதாஸன் அல்லவா? என்னிடம் படித்த பொடியனாக இருக்கவேண்டும்.

நான் இனங்காண முன்னர் அவன் "சேர் என்ன இந்தப் பக்கமாக?"

"அப்பு நீ கமல தாஸன் தானே?"

"ஓம் சேர்! நீங்கள் மறக்கேல்லை"

"என்னடா இது?"

"ராத்திரி வேட்டையாடினான். கடற்கரையில் நல்ல விலை போகும்". வெற்றிலை காவிப் பற்கள் தெரியக் கதைத்தான்.

பன்றி வேட்டை மிகவும் கடினமான தொழில். இரவிரவாக விழித்திருக்கவேண்டும். பாம்புப் புற்றுகளில் அலையவேண்டும். பனி. குளிர். மழை மிகக் கடினமான காரியம்.

"ஏனப்பு இந்த வேலை?"

"சேர் இண்டைக்கு 2000/= கையில் வரும். இறைச்சி தரட்டோ"

"வேண்டாம் தம்பி"

"போட்டு வரட்டே சேர்"

அவனுக்கு வியாபாரத்துக்குச் சுணங்கி இருக்கலாம். போய் விட்டான்.

★ ★ ★

இந்த சம்பவத்துக்கு ஐந்தாறு வருடம் முன்பு ஒருநாள் பள்ளி விட்ட பின்னர் ஒரு ஏழெட்டு மாணவர்கள் சிறு முரண்பாட்டால் [illegible] சிவசோதி, தர்சன், வர்ணகாந், இந்த கமலதாஸன் இன்னும் பலர். பெயர்கள் ஞாபகம் இல்லை. கண்டால் சொல்லலாம். சண்டையின் உச்சத்தில் சோடா உடைக்கிற கட்டால் குத்தும் அளவிற்குப் போய்விட்டது. இடையில் ஒரு பெடியனின் தமையன் கண்டதால் சண்டை முடிவுற்றது.

அடுத்தநாள் எனது விசாரணையில் அவ்வளவு பேருக் கும் நல்ல அடி கொடுத்திருந்தேன். ஆறேழு பூவரசம் தடி செலவழிந் திருந்தது.

அதில் ஒருத்தன் சிவசோதி, இப்போது A/L. பாஸ் பண்ணி கொழும்பு கம்பஸில் சயன்ஸ் & ரெக்னோஜி படித்துக்கொண்டிருக்கிறான். கம்பஸிற்கு போக முன் சிறு தேநீர் விருந்து எங்கள் பள்ளியில் கொடுத் தும் இருந்தான்.

"சேர் அண்டைக்கு அடிச்ச அடிதான் என்னில் மாற்றத்தைத் தந்தது. அதற்கு நான் நன்றி சொல்லவேண்டும்" என்று அவன் பேசியது ஞாபகம். அந்த ஏழெட்டுப் பேரில் சிவசோதி மட்டும்தான் முன்னேறியவன்.

கமலதாஸனை வேட்டைக்காரனாக யார் மாற்றியது? நானும் ஒரு காரணமாக இருக்கமுடியும் என்றுதான் நினைக்கிறேன். அவன் செய்யும் தொழில் கௌரவமானதாக இல்லையல்லவா?

இதனை எனது நண்பர் ஒருவரிடம் பகிரும்போது அவர் சொன்னார் "தம்பி! நாட்டுக்கு எல்லா வகை தொழிலாளர்களும் தேவை" என்று.

நான் அவரிடம் எதுவும் பேசவில்லை. ஆனால் 11 வருடம் ஒரு பள்ளியில் படித்து முடித்து செய்வது என்ன? வேட்டையா? எங்கு தவறுவிட்டோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் -I

34/T/I


ஆசிரியர்:தயாபரன் யாழ்.மத்திய கல்லூரி

One Hours


பகுதி-1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.


1. பின்வருவனவற்றில் அசேதன முனைவுக்கரைப்பானாக அமைவது
   1) எதனோல் ($C_2H_5OH$) 2) நீர் ($H_2O$)
   3) பென்சீன் ($C_6H_6$) 4) காபநாற்குளோறைட் ($CCl_4$)
2. செப்பு உலோகத்தினை பிரித்தெடுப்புச்செய்ய நுண்ணங்கி உயிரியல்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது இங்கு பயன்படும் நுண்ணங்கி வகை யாது
   1) Thaiobacillus 2) Streptomyces
   3) Bacillus 4) Mycobacterium
3. பொதுமைக்குழியக்கரு (பலகருக்கள்) உள்ள கலம்
   1) வெண்குழியங்கள் 2) செங்குழியங்கள்
   3) நரம்புக்கலம் 4) வன்கூட்டுத்தசைக்கலம்
4. ஈரூடகவாழிகள் அடங்கும் வகுப்பு வகை
   1) Reptella 2) Amphibia
   3) Pisces 4) Mammalia
5. தரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி உன்றிலுள்ள அமுக்கத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரண
   1) திரவத்தின் அடர்த்தி 2) திரவத்தின் கனவளவு
   3) ஈர்வையிலான ஆர்முடுகல் 4) சுயாதீன பரப்பல் இருந்து அப்புள்ளிவரையிலான ஆழம
6. ஒருவிற்தராசு, நெருக்கற்தராசு, நீர்ப்பாத்திரம், கல் ஆகியவற்றைப்பயன்படுத்திச் செய்யப்பட்ட ஒரு பரிசோதனையின் இரு சந்தர்ப்பங்கள் a,b ஆகிய உருக்களிலும் தரப்பட்டுள்ளது
   சந்தர்ப்பம் (a)- விற்தராசின் வாசிப்பு = 0.5N
   நெருக்கற்தராசின் வாசிப்பு = 5.0N
   சந்தர்ப்பம் (b)- விற்தராசின் வாசிப்பு = 0.4N எனின்
   நெருகற்தராசின் வாசிப்பு யாது
   1) 4.9N 2) 5N 3) 5.1N 4) 5.2N





7. நகப்பூச்சினை முற்றாகக் கரைப்பதற்கு பயன்படுத்தப்படும் கரைப்பான்
   1) எதனோல் 2) நாற்குளோறோ எதிலீன்
   3) அசற்றோன் 4) நீர்
8. மேற்படி படத்தில் காட்டப்பட்டுள்ள தர்க்கப்படலையின் குறியீடாக அமைவது




   1) NOT படலை 2) OR படலை
   3) AND படலை 4) AND or NOT படலை
9. வெளிநிலைக் காப்பினுள் (Ex- situ) அடங்காத வாழிடம்
   1) கடலாமை குஞ்சுப் பொரிப்பகம் 2) தாவரவியல் பூங்கா
   3) பின்னலவ யானைகள் சரணாலயம் 4) சிங்கராஜவனம்
10. வல்கனைஸ்படுத்தப்பட்ட இறப்பருக்கு சேர்க்கப்படும் பதார்த்தம் யாது
   1) காபன் 2) கந்தகம்
   3) பொஸ்பரஸ் 4) சிலிக்கன்
11. பல்வேறு மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படும் A,B,C,D என்னும் நான்கு கைத்தொழில்கள் கீழே தரப்பட்டுள்ளது
   a – வளமாக்கி உற்பத்தி b – கண்ணாடி உற்பத்தி
   c – சீமெந்து உற்பத்தி d — இரும்பு உற்பத்தி
   இவற்றிடையே சுண்ணாம்புக்கல் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் கைத்தொழில்கள் யாவை
   1) a,b,c ஆகியன 2) b,c,d ஆகியன
   3) a,c,d ஆகியன 4) a,b,d ஆகியன
12. 100g திணிவுள்ள உலோககோளம் ஒன்று $8ms^{-1}$ என்னும் வேகத்தில் இயங்குகின்றது இக்கோளத்தின் இயக்கப்பாட்டுச் சக்தி
   1) 3200J 2) 3.2J 3) 1.6J 4) 400J
13. மின்காந்த் அலைகளின் இயல்பு அல்லாதது
   1) இவை குறுக்கு அலைகளாகும்
   2) இவை ஒளியின் வேகத்தில் செல்லும்
   3) ஊடுகடத்தப்படும் ஊடகம் அவசியமாகும்
   4) மின்னின் இயல்புகளையும் காந்த இயல்புகளையும் கொண்டிருக்கும்
14. மாணவர் மேற்கொண்ட களக்கற்கையின்போது பெற்ற விலங்குகளின் எண்ணிக்கைக்கேற்ப ஓர் எண்ணிக்கை கூம்பகத்தைவரைந்தனர் இதற்கமைவாக அவர்கள் இனம்கண்ட உணவுச்சங்கிலியாக அமையச்சாத்தியம்





   1) புல் → வெட்டுக்கிளி → செண்பகம் → பாம்பு
   2) நெல் → நெற்குருவி → பாம்பு → கழுகு
   3) புல் → மாடு → தெள்ளு → கொக்கு
   4) நெல் → புறா → பாம்பு → கீரி
15. உலோகப்போலியாக அமைந்திருப்பது
   1) Mg 2) S 3) B 4) Ar
16. தற்காலத்தில் பரம்பல்பெட்டிகளில் பயன்படுத்தப்படும் உருகிகளுக்குப்பதிலாக வீடுகளில் பயன்படுத்தப்படும் சாதனம்
   1) சேவை உருகி 2) இடறு ஆளி
   3) பிரதான ஆளி 4) நுண்மின்சுற்றுடைப்பான்
17. நியமிப்புக்காகப் பயன்படுத்தப்படும் மூன்று உபகரணங்களைப் படம் காட்டுகின்றது இவை a,b,c முறையே குறிப்பன




   1) கூம்புக்குடுவை, கழுவிப்போத்தல், பெத்திக்கிண்ணம்
   2) அடிவட்டக்குடுவை, கடிகாரக்கண்ணாடி, கழுவிப்போத்தல்
   3) கனமானக்குடுவை, கழுவிப்போத்தல், கடிதாரக்கண்ணாடி
   4) நியமிப்புப்பாத்திரம், கழுவிப்போத்தல், கடிகாரக்கண்ணாடி
18. நுணுக்குகாட்டியினூடாகப் பார்க்கும்போது இலையில் குறுக்குவெட்டிற் காணத்தக்க பச்சையம் இல்லாத கலங்கள்
   1) மேற்றோல் கலங்கள் 2) வேலிக்காற் கலங்கள்
   3) கடற்பஞ்சுக் கலங்கள் 4) காவற் கலங்கள்
19. பொருள் ஒன்று கீழிருந்து மேல்நோக்கி எறியப்பட்டது அப்பொருளின் இயக்கத்திற்கான வேக-நேர வரையை சரியாகத் தருவது




20. ஒட்டுக்கலவிழையத்தை அவதானிப்பதற்கு மிகவும் உகந்த மாதிரிப்பொருள் எது
   1) பூசனித்தண்டு 2) அப்பிள்பழத்தின் பகுதி
   3) குப்பைமேனி வேர் 4) நெல் தண்டு
21. படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தினைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடு



   1) காச்சிவடித்தல்
   2) எண்ணெய் ஆவியையும் நீராவியையும் வேறுபிரித்தல்
   3) எண்ணெய் ஆவியையும் நீராவியையும் ஒடுக்குதல்
   4) எண்ணெய், நீரை தனித்தனியாக பிரித்தெடுத்தல்
22. முழு உலகமும் வெப்பமடைதல் என்பது இன்று உலகு எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினையாகும் இதற்குக் காரணம் பச்சைவீட்டு வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்வதாகும் பச்சைவீட்டு விளைவுக்கு காரணமல்லாத வாயு
   1) காபனீரொட்சைட் 2) நீராவி 3) மிதேன் 4) நைதரசன்
23. இலத்திரனியல் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் நான்கு துணைச்சாதனங்கள் கீழே a,b,c;d எனக்காட்டப்பட்டுள்ளன இவை முறையே சரியாக இனங்காட்டப்பட்டிருக்கும் ஒழுங்கு





   1) மாறும் கொள்ளளவி, சாதாரண கொள்ளளவி, மின்பகுப்புகொள்ளளவி, முற்றுணிந்த கொள்ளளவி
   2) முற்றுணிந்த கொள்ளளவி, சாதாரண கொள்ளளவி, மாறும்கொள்ளளவி, மின்பகுப்பு கொள்ளளவி
   3) முற்றுணிந்த கொள்ளளவி , மின்பகுப்பு கொள்ளளவி, மாறும்கொள்ளளவி, சாதாரணகொள்ளளவி
   4) மாறும் கொள்ளளவி, சாதாரணகொள்ளளவி, முற்றுணிந்த கொள்ளளவி, மின்பகுப்பு கொள்ளளவி

24-26 வரையுள்ள வினாக்கள் வின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. அட்டவணையில் A,B,C,D,E எனக்காட்டப்பட்டுள்ள பதார்த்தங்களின் இயல்புகளைப் பரிசீலித்து கீழ்வரும் வினாக்கட்கு (A,B,C,D,E நியமக்குறியீடுகளோ / சூத்திரங்களோ அல்ல)

| பதார்த்தம் | உருகுநிலை | கொதிநிலை | மின்னைக் கடத்தல் | |
|---|---|---|---|---|
| | | | திண்ம நிலையில் | உருகிய நிலையில் |
| A | -105 | -31 | குறைவாக | குறைவாக |
| B | -128 | 78 | குறைவாக | குறைவாக |
| C | 750 | 1410 | குறைவாக | உயர்வாக |
| D | 1089 | 2693 | உயர்வாக | உயர்வாக |
| E | 3876 | 4847 | குறைவாக | குறைவாக |


24. அறைவெப்பநிலையில் திரவமாக இருக்கும் பதார்த்தம் யாது
   1) A 2) B 3) C 4) D
25. அயன் சேர்வையாக இருக்கத்தக்க பதார்த்தம்
   1) B 2) C 3) D 4) E.
26. மின்வடங்களில் பயன்படுத்தப்படும் உலோகங்களை ஒத்த இயல்புகளைக்காட்டும் பதார்த்தம்
   1) B 2) C 3) D 4) E
27. குளோரோ புளோரோ காபன் (CFC) பயன்பாடடை இழிவழவாக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை
   1) கொயோட்டே வரைகோடு 2) CITES சமவாயம்
   3) பொன் சமவாயம் 4) மொன்றியல் வரைகோடு
28. அருகில் காட்டப்பட்டுள்ள அமைப்பில் மின்பகுப்பு நடைபெறும் போது அவதானிக்கத்தக்க மாற்றம்




   1. இரும்புத்தோட்டு செந்நிறமாதல்
   2. கரைசலில் நீலநிறம் அதிகரிக்கும்
   3. கரைசலில் நீலநிறம் குறையும்
   4. இரும்பு மின்வாய்க்கருகில் வாயுக்குமிழ்கள் தோன்றும்
29. அகஞ்சுரக்கும் சுரப்பிகளும் அவைசுரக்கும் ஓமோன்களும் தரப்பட்டுள்ளன அவற்றில் குறித்த சுரப்பி சுரக்கும் ஓமோன்களை சரியாகத் தொடர்பபடுத்தும் விடையாக அமைவது

| சுரப்பி | ஓமோன் |
|---|---|
| a- கபச்சுரப்பி | p- தைரொடசின் |
| b- அதிரினல் சுரப்பி | q- அதிரினலின் |
| c- சதையி | r- TSH |
| d- தைரோயிட்சுரப்பி | s- இன்சுலின் |

   1) a-p, b-q, c-r, d-s 2) q-r, b-q, c-s, d-r
   3) a-r, b-q, c-s, d-p 4) a-s, b-r, c-r, d-q
30. குழிவாடி ஒன்றின் குவியத்தூரம் 10cm அகும். ஆடியில் இருந்து 15cm தூரத்தில் வைக்கப்பட்டுள்ள பொருள் ஒன்றுக்கு கிடைக்கும் விம்பத்தின் இயல்புகளைத் திருத்தமாகக் காட்டுவது
   1) விம்பத்தூரம் 30cm, நிமிர்ந்தது, மெய்யானது
   2) விம்பத்தூரம் 20cm, தலைகீழானது, மெய்யானது
   3) விம்பத்தூரம் 30cm, தலைகீழானது, மெய்யானது
   4) விம்பத்தூரம் 20cm, நிமிர்ந்தது, மெய்யானது
31. தன்வெப்பக்கொள்ளளவை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் அலகு
   1) J/K 2) JkgK 3) J kg/K 4) J/kg/K
33. சாதாரண வளிமண்டல அமுக்கத்தில் பின்வரும் எவ்வாயுவின் கரைதிறன் மிகக்குறைவானது
   1) காபனீரொட்சைட் வாயு 2) ஐதரசன்குளோரைட் வாயு
   3) அமோனியா வாயு 4) கந்தகவீரொட்சைட் வாயு
34. உருவிற்காட்டப்பட்டுள்ளவாறு A,B என்னும் விற்தராசுகளினால் தொங்கவிடப்பட்டுள்ள உலோககோல் ஒன்றில்இருந்து 4N, 12N, 4N எனும் சுமைகள் தொங்கவிடப்பட்டுள்ளன A,B ஆகிய விற்தராசுகளின் வாசிப்புக்கள் முறையே




   1) 4N, 4N 2) 6N, 6N 3) 10N, 10N 4) 16N, 16N
35. பின்வருவனவற்றில் எது மூலநாடியின் தொழில்
   1) பிறபொருளெதிரிகளை உருவாக்குதல் 2) எப்பாரினைச் சுரத்தல்
   3) ஒவ்வாமைக்கு துலங்கலைக்காட்டல் 4) நோய்க்கான பக்றீரியங்களை அழித்தல்
36. A என்னும் புள்ளியிலுள்ள ஒரு பொருள் அருகில் காட்டப்பட்ட அரைவட்டப் பாதைவழியே பயணம் செய்து புள்ளி B அடைகிறது பொருளின் இடப்பெயர்ச்சி வடகிழக்காக




   1) 14m 2) 28m 3) 44m 4) 88m
37. கொடித்தோடைத்தாவரத்தில் தன்மகரந்தச்சேர்க்கையைத் தடுப்பதற்கு கொண்டுள்ள இசைவாக்கமாக அமைவது
   1) ஒருபாற்பூக்கள் காணப்படல் 2) ஆணகமுன்முதிர்வு
   3) தன்மலட்டுத்தன்மை 4) வெளிப்புறமாகத்திரும்பிய மகரந்தக்கூடு
38. குறைந்தபோசனை இழப்புடன் உணவைப்பதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மின்காந்தஅலைவகை
   1) X- கதிர்கள் 2) செங்கீழ்கதிர்கள் 3) நுண்அலைகள் 4) கழிஊதாக்கதிர்கள்
39. தற்போது சீனாவில் பால்மாக்களில் அதிகளவுஅடங்கியுள்ள பதார்த்தத்தினால் சிலநாடுகள் அப்பால்மாவை இறக்குமதிசெய்வதை நிறுத்தியுள்ளன அதிலடங்கியுள்ள பதார்த்தம்
   1) குளுக்கோஸ் 2) அயடீன் 3) மெலனோல் 4) மெலனீன்
40. விஞ்ஞானபாடத்தினை மாணவர்களிடையே செயன்முறையினூடாகக் கற்பிப்பதன் நோக்கம்
   1) [illegible]க்க கற்கை சூழலை ஏற்படுத்தி கோட்பாடுகளை இலகுவாக விளக்குவதற்கு
   2) செயன்முறையை பொருத்தமானவாறு பிரயோகித்து பிரச்சினைகளை விடுவிக்கும் தேர்ச்சியை வளர்த்தல
   3) கிடைக்கும் அனுபவங்களை விஞ்ஞானபூர்வ பிரமாணங்களின்படி மதிப்பிடும் திறனை வளர்த்தல
   4) மேற்கூறிய யாவும் சரியானவை

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

34 / T / II

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை – 2008 மாதிரி வினாத்தாள்


விஞ்ஞானம் நேரம் - 3.00 மணித்தியாலம்

❖ பகுதி A யில் எல்லா வினாக்கட்கும் தரப்பட்ட வினாத்தாளிலேயே விடை எழுதுக.

❖ பகுதி B யில் உள்ள பிரிவு 1, 11, 111 இல் ஒரு வினாவை மட்டும் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்கட்கு மட்டும் விடை தருக.

## பகுதி A

1. 1. தகனத்தின்போது தோன்றும் விளைவுகளை அறியமாணவர்குழு ஒன்று மேற்கொண்ட சோதனைஒழுங்கமைப்பு தரப்பட்டுள்ளது.




அ) மேற்படி அமைப்பினைப் பயன்படுத்தி பின்வரும் வேலைப்படிவத்தைப் பூர்த்திசெய்க

| பயன்படுத்தப்படும பதார்த்தம் | பதார்த்தத்தின் நிறம் | தகனத்தின்பின் நிறமாற்றம் | நிறமாற்றத்திற்கான காரணி |
|---|---|---|---|
| நீரற்ற $CuSO_4$ | | | |
| சுண்ணாம்பு நீர் | | | |

(3)

ஆ) இங்கு நீர் எடுக்கப்பட்டதன் நோக்கம் யாது

........................................ (1)

இ) மேற்படி நோக்கத்தினை மேலும் விரைவாகவும் வினைத்திறனுடையதாகவும் மாற்ற முகவையினுள உள்ளநீரின் பௌதீகநிலையில் ஏற்படுத்தக்கூடிய மாற்றம் யாது

........................................ (1)

ஈ) இங்கு புனல் மெழுகுவர்த்தியை முற்றாகமூடி வைக்கப்படாததற்கான காரணம் யாது

........................................ (1)

உ) உறிஞ்சியின் மூலமாக நிறைவேற்றப்படும் செயற்பாடு யாது ?

........................................ (1)

2. பொருட்கள் தகனமடைவதனால் அதிகளவு சூழல் மாசடைகின்றது

அ) இவ்வமைப்பில் தகனம் நடைபெறும் போது வெளிவிடப்படும் சக்தி விளைவுகள் எவை ?

........................................ (1)

ஆ) இவ்விளைவுகளில் மின்காந்த அலையியக்கம் உடையது எது ?

........................................ (1)

இ)மெழுகானது பெற்றோலியத்தின் கூறாகும் பெற்றோலிய கூறான புறப்பேனின் ($C_3H_8$) தகனத் தாக்கத்தை தருக

........................................ (2)

3. தகனத்தின் போது வெளிவரும் வாயுவானது தாவரங்களின் முக்கிய உயிர்ச்செயற்பாட்டுக்கு அவசியம்

அ) அச்செயற்பாட்டினைப் பெயரிடுக

........................................ (1)

ஆ) இதில் தோன்றும் பக்கவிளைவு கலங்களில் சக்தியைப்பிறப்பிக்க அவசியமாகும் இங்குநிகழும் சக்தி உருவாக்கத் தாக்கத்தை எழுதிஈடுசெய்க

........................................ (2)

இ) இக்கலத்தாக்கம் நடைபெறும் கலப்புன்னங்கத்தின் உள்ளமைப்பினை தெளிவாக அவதானிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது

........................................ (1)

(15 புள்ளி)

2. அ) ஆவர்த்தன அட்டவணையின் அடுத்துள்ள இரு ஆவர்த்தன மூலகங்களின் உருகுநிலை வரைபு தரப்பட்டுள்ளது. இவை நியமக்குறியீடுகள் அல்ல இவற்றைப்பயன்படுத்தி விடை தருக




1) R என்னும் மூலகத்தின் இலத்திரன்நிலையமைப்பை எழுதுக .................... (1)

2) P,U எக்கூட்டத்திற்குரியவை என இனங்காண்க
P.................... கூட்டம் U.................... கூட்டம் (1)

3) U,P அணுக்கள் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் இரசாயன சூத்திரத்தை தருக
........................................ (1)

4) தரப்பட்டவற்றில் அணுஆரை மிகக்குறைந்த மூலகம்எது .................... (1)

5) R ஆனது U உடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் லூயிசிஸ்இன் (Lewis) கட்டமைப்பை தருக: (புள்ளி புள்ளடி வடிவம் )




(2)

ஆ)1) வாயுக்களின் கனவளவு மாறாஅமுக்கத்தில் வெப்பநிலையுடன் எவ்வாறு மாறுபடுகின்றது என அறிய மேற்கொண்ட பரிசோதனை அமைப்பு காட்டப்பட்டுள்ளது அட்டவணையை பூர்த்திசெய்க

| வளிநிரலின்நீளம் | °C | K |
|---|---|---|
| 2.8cm | 17 | ------- |
| 3.8cm | 37 | ------- |
| 4.6cm | ---- | 320 |
| 5.4cm | 67 | -------- |

(2)

2) கனவளவிற்கும் (1) தனிவெப்பநிலைக்கும் (K) வரைபு வரைக ( கனவளவு நீளத்திற்கு நேர்விகிதசமம் எனக்கொள்க)




3) மேற்படி வரைபில் இருந்து கனவளவிற்கும் தனிவெப்பநிலைக்கும் இடையிலான தொடர்பை தருக

........................................ (1)

4) மேற்படி முடிவில் இருந்து பெறப்படும் விதியின் பெயரைத் தருக

........................................ (1)

5) 300K இல் ஒருமாதிரி வாயுவின் கனவளவு $1200cm^3$ அமுக்கம் மாறாதிருக்கும்போது இதன் வெப்பநிலையை 700K ஆக அதிகரித்தால் இவ்வாயுவின் கனவுளவு யாது

........................................ (2)

(15 புள்ளி)

3. நவீன இலத்திரனியல்துறையில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் தரப்பட்டுள்ளன இவற்றைப்பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க


| துணைச்சாதனம | குறியீடு | தொழில் |
|---|---|---|
|  | அ) | |
|  | ஆ) | |
|  | இ) | |

(3)

ஈ) மேற்படி துணைச்சாதனங்கள் எல்லாவற்றையும் சிறியபரப்பினுள் உள்ளடக்கிய தனிக்கூறு எவ்வாறு அழைக்கப்படும்

........................................ (1)

உ) ஆடலோட்டமின்னோட்டத்தை A,B யினூடாக செலுத்தி X,Y யினூடாக நேரோட்டமின்னோட்டமாக மாற்ற மாணவன் மேலேதரப்பட்ட ஒரு கூறினைப் பயன்படுத்தினான் அதனை இணைத்துக்காட்டுக




(2)

ஊ) மேற்படி நேரோட்டமின்னோட்டத்தை ஒப்பமாக்கவேண்டியுள்ளது இதற்கான கூறினை அமைப்பில் இணைக்குக

(2)

ஒரு அலைஇயக்கத்தைப் படம் காட்டுகிறது இதனைப்பயன்படுத்தி பின்வருவனவற்றிக்கு விடைதருக




அ) மேற்படி அலையில் எத்தனை அதிர்வுகள் நிகழ்ந்துள்ளது ....................

ஆ) வீச்சம், அலைநீளப் பெறுமானங்களை தருக

வீச்சம் .................... அலைநீளம் .................... (2)

இ) மேற்படி அலையானது ஒரு செக்கனில் அதிர்ந்ததாயின் இவ் அலையின் வேகம் யாது

........................................ (2)

ஈ) கழிஒலி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக

........................................ (2)

(15 புள்ளி)

4. தரப்பட்ட விலங்குகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றிக்கு விடைதருக





அ) பின்வரும் இடைவெளிகளில் A,B,C,D,E என்னும் எழுத்துக்களை இடுக

1) மூட்டுக்கால்கள் கொண்டவை ....................
2) மூட்டுக்கால்கள் அற்றவை ....................
3) ஆரைச்சமச்சீருடையது ....................
4) ஈருடகவாழி ....................
5) நீரநிலையியல் வன்கூட்டைக் கொண்டது .................... (2.5)

ஆ) A,B,C,D,E அடங்கும் வகுப்பு/கணங்களை பெயரிடுக.

A
B
C
D
E




(2.5)

மேற்படி அமைப்பு எதன் கட்டமைப்பலகாகும்

........................................ (1)

அ) a,b,c,d ஐப் பெயரிடுக

a b

(2)

ஆ) a யில்திரவத்தில் காணப்படும் சிறுநீரில் காணப்படாத பதார்த்தங்கள் இரண்டு தருக

(2)

இ) செயற்கையாகவும் இயற்கையாகவும் தாவரங்கள் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. இதனைப் பயன்படுத்தி 1,2,3,4 என்னும் இடைவெளிகளைப் பூர்த்திசெய்க

| இயற்கை இனப்பெருக்கமுறை | உதாரணம் | செயற்கைஇனப்பெருக்கமுறை | உதாரணம் |
|---|---|---|---|
| 1. .................... | குரோட்டன் | பதிவைத்தல் | 3.................... |
| வேர்மூலம் | 2.................... | 4 .................... | தேயிலை |

(2)

7. வித்து முளைந்தலுக்குத் தேவையான புறக்காரணிகள் எவை

........................................ (1)

8. பெண்களில் சூல்புடைப்புகளை தூண்டுவதற்காக கபச்சுரப்பியினால் சுரக்கப்படும் ஓமோன்யாது

........................................ (1)

9. மேற்படி ஓமோனின் தூண்டுதலினால் பெண்களின் சூலகங்களினால் சுரக்கப்படும் ஓமோன்கள் யாது

........................................ (1)

(15 புள்ளி)

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான தின விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் கே.கந்தசாமி மற்றும் விஞ்ஞான மன்றப் பொறுப்பாசிரியர் அ.லோகநாதன், பிரதி அதிபர் டபிள்யூ.எஸ்.ஜெயசீலன், சென்.ஜோன்ஸ் கல்லூரி உயிரியல் பாட ஆசிரியர் எம்.எம்.அல்போன்ஸ், மன்றத் தலைவர் க.அர்ச்சுதன், கல்லூரி அதிபர் செ.பத்மநாதன், பிரதி அதிபர் கு.சிவகுமார் ஆகியோர் இறைவணக்கம் செய்வதை முதலாவது படத்தில் காணலாம்.

'மத்தி ஆய்வாளன்' சஞ்சிகையை கல்லூரி அதிபர் பிரதம விருந்தினரிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மனித முன்னேற்றத்திற்குக் காரணமான தொழில்நுட்பம் அரசியல் தலையீட்டால் அழிவுக்கும் வழிகோலுகின்றது

## கவலை தெரிவிக்கிறார் பேராசிரியர் கந்தசாமி

யாழ்ப்பாணம், நவ.22

இன்று இவ்வுலகத்தின் இயக்கம் முற்று முழுதாகத் தொழில்நுட்பத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. மனித முன்னேற்றத்துக்குக் காரணமான இந்தத் தொழில்நுட்பம் சில சமயங்களில் அரசியல் தலையீட்டால் மனித குல அழிவுக்கும் காரணமாக அமைந்து விடுவது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மத்திய கல்லூரி இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்வி வரலாறு உடையதொரு பாடசாலையாகும். முன்னைய காலங்களில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் மாணவர்கள் இப்பாடசாலைக்கு விரும்பி வந்து கல்வி கற்குமளவுக்கு இப்பாடசாலை கல்விப்புலத்தில் தனது முத்திரையைப் பதித்திருந்தது. இப்பாடசாலையில் கல்வி பயின்ற பலர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, பொருளியலாளர்களாக, கல்வியாளர்களாக, சட்டமேதைகளாக சமூகத்துக்குச் சேவையாற்றியுள்ளனர்.

இன்று இவ்வுலகத்தின் இயக்கம் முற்று முழுதாகத் தொழில்நுட்பத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. தொடர்பாடல்த் தொழில்நுட்பம், அணுத்தொழில் நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், நனோத் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம் போன்ற தொழில்நுட்பங்கள் மானிடவாழ்வை மட்டுமல்ல இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வகையான உயிரினங்களின் வாழ்வியலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இன்று தொடர்பாடல் தொழில் நுட்பக் கருவிகளை உபயோகிக்கத் தெரியாதவர்கள் இவ்வுலகில் வாழத்தெரியாதவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள்.

### விஞ்ஞானக் கல்வியை சுயமாகக் கற்கப் பழகவேண்டும்

மனிதகுல மேம்பாட்டிற்கு விஞ்ஞானத்தின் பங்கு அளப்பரியது. சிலசமயங்களில் அரசியல் தலையீட்டால் விஞ்ஞான வளர்ச்சி மனிதகுல அழிவுக்கும் காரணமாக அமைந்து விடுவது கவலைக்குரிய விடயமாகவும் உள்ளது. விஞ்ஞானிகள் அணுப்பிளவால் உண்டாகும் சக்தி மனிதகுல மேம்பாட்டிற்காகவே உபயோகிக்கப்படுத்தப்படும் என்று நம்பினா். அதற்காகவே அல்லும் பகலும் ஆராய்ச்சி செய்தனர். ஆனால் அணுசக்தி அணுக்குண்டின் வடிவெடுத்தபோது அதற்காக அவ்விஞ்ஞானிகளால் பலர் கவலையடைந்தனர், கண்ணீர் வடித்தனர் என்று வரலாறு. விஞ்ஞான ஆராய்ச்சிகளில் எதிர்பாராத கண்டுபிடிப்புகள் கூட மனிதகுல வாழ்வுக்கும், மேம்பாட்டிற்கும் இன்றியமையாதவையாக அமைந்துவிடுகின்றன.

மாணவர்கள் விஞ்ஞானக் கல்விகற்கும் ஆற்றலை உயர்த்தவேண்டுமாகில் நீங்கள் சுயமாகக் கற்க முயற்சிக்க வேண்டும். விஞ்ஞானக் கல்வியைக் கற்பதற்கு நீங்கள் சுயமாகக் கற்க பழகிக்கொள்வது அவசியம். எதையும் கூர்மையாக அவதானிப்பதும், அவற்றிற்கு காரணம் கூறக்கூடிய ஆற்றலை உருவாக்குவதும் இன்றிமையாததாகும். இன்றைய எமது கற்கும் முறைகள் இவற்றுக்கு உகந்ததாக அமையவில்லை. இன்றைய மாணவர்கள் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதையே மையமாக வைத்துக் கொண்டு கல்விகற்கின்றார்கள். அதற்காகவே தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றார்கள். இந்த நிலையங்கள் அவர்களின் சுயமாக கற்கும் ஆற்றலை மழுங்கடிக்கின்றன. இந்நிலைமை நல்ல விஞ்ஞானிகளை உருவாக்க ஆரோக்கியமானதாக இல்லை. சுயமாகக் கற்கப் பழகிக்கொள்ளும் மாணவர்கள் தான் சுயமாகச் சிந்திக்க முடியும். சுயமாக சிந்திக்கக் கூடிய மாணவர்கள்தான் பிற்காலத்தில் நல்லதோர் ஆராய்ச்சியாளனாக உயர்ந்து தனது சமூகத்துக்கு, நாட்டுக்கு, ஏன் [illegible] ணவர்களாக மிளிர்வார்கள்.- என்றார். (202)

## ஞானப்பிரகாசம் நினைவு தினம்

சமூக அபிவிருத்திமன்ற ஸ்தாபகரும், முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் நினைவு தினம் 109, பருத்தித்துறை வீதி, நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றக் காரியாலயத்தில் மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரட்ணமும் யாழ். மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் க.முதலியாரும் சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பாளர் திருமதி என்.ஜெகதீசனும் உரையாற்றுவர்.


## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்: 20.05.1949

இறைவனடியில்: 22.11.1986

அமரர் வேலுப்பிள்ளை
**கனகரத்தினசிங்கம் (பிலேந்திரன்)**
(யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்)

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மோடு பழகிய எம் குடும்ப ஒளி விளக்கே!
எம்மைப் பிரிந்து சென்றாலும் எம் ஆயுள்
உள்ளவரை என்றும் உம் நினைவு எங்களுடன்....!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு,
இணுவில். (79970)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 26.04.1946

மறைவு: 21.10.2008

அமரர்
**பொன்னம்பலம் அருமைநாயகம்**
(22.11.2008)

எங்கள் குலவிளக்கு சிவபதமடைந்த செய்திகேட்டு உதவிய அயலவர்களுக்கும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு ஆத்மாசாந்தி அடைய பிரார்த்தித்தோருக்கும் கிரியையாற்றிய குருவுக்கும் தோத்திரம் இசைத்தோருக்கும் மேலும் பல உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (22.11.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'கேமவாசா', சித்திரமேழி,
இளவாலை,
தொ.பே: 060 221 6253 (80000)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12.01.1930

உதிர்வு: 22.11.2007

அமரர் **தம்பு செல்லத்துரை**

நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாகத் தொடருதையா!
தாங்காது தவிக்கின்றோம்
உங்கள் பிரிவுத் துயரால்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (79910)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 04.08.1963

மறைவு: 14.10.2008

**அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி**

14.10.2008 ஆம் நாள் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்களின் 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியகிரியைகளும் 23.11.2008 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணி தொடக்கம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவின்போது உடனிருந்து உதவிபுரிந்தோர், இறுதிக்கிரியைகள், இறுதி யாத்திரையின்போதும் கலந்துகொண்டோர், தொலைபேசி மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும், பத்திரிகைகள், இணையத்தளங்கள் மூலமாகவும் துயரத்தினைப் பகிர்ந்து ஆறுதல் கூறியோர், மலருக்கான அனுதாபச் செய்திகள், கட்டுரைகள் தந்துதவியோர் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்து மன ஆறுதல் தந்துதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை இதயத்தால் இயம்புகின்றோம்.

சுறோம்படி, திக்கம்,
அல்வாய். (79977)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட, அரசாங்க ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் 'சிறுவர் கதை' எழுதி இரண்டாமிடம் பெற்றுக்கொண்ட யாழ்.பொதுசன நூலகத்தில் கடமையாற்றும் ஜி.ஜெஸ்ரின், கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடருந்து பரிசிலைப் பெற்றுக் கொள்வதையும், வரவேற்பு நடனக் குழுவினரையும் அமைச்சின் செயலாளர்களையும் படத்தில் காணலாம்.




சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் முதியோர் சங்கங்களும் இணைந்து நடத்திய முதியோர் தின விழா அண்மையில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டியில் முதியோர் ஓடுவதற்குத் தொடங்குவதை மேலே காணலாம். (படம்:நவாலி செய்தியாளர்)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை, மாணவர்களுக்கான உதவித் திட்டத்தின் கீழ் பாடசாலை உபகரணங்களை அண்மையில் வழங்கியது.

நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியை திருமதி எஸ்.கந்தசாமி மாணவி ஒருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:கர்ணன்)




சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பருவ மங்கையர்களுக்குப் பரிசோதனைகளை நடத்தி வருகின்றனர்.

பரிசோதனை செய்வதற்குரிய அட்டைகள் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் கையளிக்கப்பட்டன. சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் உப அலுவலகத்தில் கழக உறுப்பினர் லயன் எஸ்.அருளம்பலம் அப்பகுதிக் குடும்பநல சேவையாளரிடம் கையளிக்கப்படுவதையும், அருகில் கழகத் தலைவர் லயன் க.சரவணமுத்து, கொடிகாமம் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரொனால்ட் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்:தென்னவன்)



யாழ்.கடலோட்டு மற்றும் எந்திரவியல் கல்லூரியில் 3 மாத கடல்வள பயிற்சிநெறி நடத்தப்பட்டுப் வருகின்றது.

யுவதிகள் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:த.பரமலிங்கம்)



கொழும்புத்துறை றொசாரியன் ச.ச.நிலையத்தினரால் அண்மையில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. அவ்விழாவில் எழுத்தாளரும், நடிகருமான எஸ்.யேசுதாஸிற்குப் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜெறோ செல்வநாயகம் அடிகள் பொன்னாடை போர்த்தி 'பல்துறைப் பேராளன்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கும்போது எடுக்கப்பட்ட படம்.



சமுர்த்தி வாழ்வாதாரக் கருத்திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளுக்காக மக்கள் பங்களிப்புடன் சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களில் ஒன்றை சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு வழக்கம்பரை சமுர்த்தி வங்கி முகாமையாளர் செல்வி த.சுதா வழங்குவதைக் காணலாம்.
(படம்:மு.சந்திரகுமார்)




ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் வாழ்த்துரை வழங்குகிறார். பாடசாலை அதிபர் , பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி க.தேவராஜா, அவரது பாரியார் , உப அதிபர் திருமதி [illegible]கணேசமூர்த்தி ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

(படம்:ஸ்ரீகுமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது எதிர்காலம் குறித்த ஏக்கத்துடன் நிற்கும் உடற்கல்வி மாணவர்களுக்கு விடிவு பிறக்குமா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற் கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் கடந்த மூன்று மாதங்களாகத் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து, தமது கல்விக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவர்களுடைய இந்தப் பகிஷ்கரிப்பு விடயம் ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்று மறியற் போராட்டம், வீதியில் இறங்கிக் குழப்பங்கள் செய்தல், சொத்துக் களைச் சேதப்படுத்தல் என்ற ரீதியில் இல்லாமல் மிகவும் அமைதியான முறையில் நடைபெறுகின்றது. எழுத்து மூலமும் தமது சாத்வீகப் போராட்டத்துக்கான காரணத்தை துணைவேந்தர் உட்பட தமது துறை சார்ந்த உரியவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சிநெறி இன்று பத்தாண்டுகளைத் தாண்டி காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், ஓர் இளைய தலைமுறை இந்தக் கற்கைநெறி தமது எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டுமா? சோறு போடுமா? என்று சிந்திக்கத் தொடங்கியதன் விளைவே இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம்.

பல்கலைக்கழகம் என்பது பலதுறைகளிலும் கல்வியியலாலர்களையும் துறை சார் நிபுணர்களையும் உருவாக்குவது. இதுவிடயத்தில் வேறுமனே வாழ்க்கைக்குப் பயனற்ற கல்வியியலாளர்களை மட்டும் உருவாக்குவது என்பது எந்தளவுக்கு நியாயமானது என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

ஆரம்பத்தில் இரண்டு வருட டிப்ளோமாப் பயிற்சி நெறியாக ஆரம்பிக்கப்பட்டு,

**விண்ணன்**

காலப்போக்கில் இது ஒரு பட்டப்படிப்பு பாடநெறியாக மாற்றப்படும் என பல்கலைக் கழக துணைவேந்தர் உட்பட பலரும் மாணவர்களுக்குஅப்போது வாக்குறுதி களை வழங்கி யிருந்தனர்.

குறிப்பாக தமிழ் மக்கள் தமது கல்வி விடயத்தில் மிகவும் அக்கறை உடையவர்கள். அன்று தொட்டு இன்று வரைக்கும் இனப்பிரச்சினையும், யுத்தமும், இடம் பெயரும் அவலங்களும் தொடர்ந்த போதும் கல்வி விடயத்தில் அவர்கள் மிகவும் அக்கறையுடனேயே செயற்பட்டு வருகின்றார்கள்.

அந்த வகையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் பலர் தற்போது டிப்ளோமா சான்றிதழாக இருந்தாலும், எதிர்காலத்தில் பட்டச் சான்றிதழாக தரமுயரும் என்ற நம்பிக்கையில் சொந்தப் பணத்தைச் செலுத்தி உடற்கல்வி விஞ்ஞான கற்கை நெறியைத் தொடருகின்றனர்.

ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு ஐயாயிரம் ரூபா பணம் அறவிடப்பட்டு 50 முதல் 60 வரையான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இப் பயிற்சிநெறி தமக்கு கைகொடுக்கும். எதிர்காலத்தில் பதவி உயர்வுகளைப் பெறுவதற்கு உதவும் என்ற நம்பிக்கையில், சில ஆசிரியர்கள் கூட, கல்வி அமைச்சு உயர் கல்விக்கான சம்பளத்துடன் கூடிய லீவு வழங்க மறுத்த வேளையிலும் சம்பளமற்ற விடுமுறையைப்பெற்று இக்கற்கை நெறியைக் கற்றுள்ளார்கள்.

வருடாவருடம் மாணவர்கள் அனுமதி பெறுவதும் வெளியேறுவதும் தொடர் கதையாகிக்கொண்டே இருந்தது. இதற்கு ஏற்ப குறிப்பிட்ட கற்கை நெறிக்கான கற்கைக் கட்டணங்களும் காலத்துக்குக் காலம் அதிகரிக்கப்பட்டு7,500/= , 12,000/= ரூபாவென விலைவாசி உயர்வு போல ஏறிக்கொண்டே சென்றன.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஜி.சி.ஈ. உயர்தரம் சித்தி அடைந்தவர்களுக்கு போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. அப்போது உடற்கல்வியில் இரண்டு வருட டிப்ளோ மா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களின் தகைமை கருத்தில் கொள்ளப்படவில்லை.

**பாடநெறியின் பயன் குறித்து......**

இந்த நேரத்தில்தான் உடற்கல்வி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் தமது பாடநெறியின் பயன் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினார்கள். ஆனால் உரிய அங்கீகாரத்தை வழங்க கல்வி அமைச்சு மறுத்து விட்டது. இந்நிலையில் மாணவர்கள் அரசியல்வாதிகளிடமும் உயர் அதிகாரிகளிடமும் சென்று தமது பரிதாப நிலைமையை எடுத்துக் கூறினார்கள்.

இதன் பயனாக வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சினால் அங்கீகரிக்கபட்ட நிறுவனம் ஒன்றில், ஆறுமாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கான உடற்கல்விப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஒரு சலுகைப் புள்ளி வழங்கி, அவர்களுக்கு உடற் கல்வி ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்டது. இவர்களோடு சேர்ந்து புறக்கணிப்புக்குள்ளான மீன்பிடியியல் டிப் ளோமா மாணவர் களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நடவடிக்கை மாணவர்களிடத்தே மீண்டும் ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்கியது. இதனால் வழமை போன்று மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து உடற்கல்வி டிப்ளோமாவை கற்பதற்கு எண்ணியதுடன் தமது எதிர்காலத்துக்கும் வழி ஏற்படும் எனவும் நம்பிக்கை கொண்டு வருடாவருடம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இப்பயிற்சி நெறியைப் பயிலத் தொடங்கினர்.

ஏற்கனவே கல்வி கற்று டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் பட்டப்படிப்பு என்ற இலக்கை அடைவதற்காகப் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்ட போது அதற்கும் சம்மதம் தெரிவிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து 3 வருடப் பயிற்சியுடன் உயர் டிப்ளோமா சான்றிதழ் என்ற புதிய பெயருடன் சான்றிதழும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. வருடம் ஒன்றிற்கு 15 ஆயிரம் ரூபாவாக அனுமதிக் கட்டணமும் உயர்த்தப்பட்டு 50 தொடக்கம் 60 வரையான மாணவர்கள் இணைக்கபட்டனர்.

உயர் டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பிப்பதற்கான அனுமதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக செனட்(மூதவை)யினால் அங்கீ கரிக்கப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் இந்தப் பயிற்சி நெறிக்கான அனுமதி குறித்து அறிவிக்கும் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் மாணவர்கள் உயர் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு உரிய தீர்மானம் அனுப்பப்படவில்லை எனவும் இதனையிட்டு பல்கலைக்

களே மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதனை மாணவர்கள் ஏற்க மறுத்தார்கள். பரீட்சை எழுதுவதைப் பகிஷ்கரித்தார்கள். புதிய பிரிவுக்கான மாணவர்களை உள்வாங்குவதற்கு பல்கலைக்கழகத்தினர் ஆயத்தமான வேளையில், புதிதாக உள்வாங்கப்படவிருந்த் மாணவர்களுக்கும் தமது பரிதாப நிலைமையைக் கூறி, ''நீங்களும் இந்த மாயை வலையில் சிக்கிவிடாதீர்கள்'' என்ற நிலைமையை 3ஆம் வருட மாணவர்கள் எடுத்துரைத்தார்கள். அதன்பின்னர் இடம்பெற்ற பல்கலைக்கழக நிர்வாகத்தினருடனான சந்திப்பில் நிர்வாகத்தினர் மாணவர்களுக்குச் சாதகமான பதிலை வழங்கவில்லை. ''இந்தப் பயிற்சி நெறி வேலை வாய்ப்புக்கு உரியதோ, பல்கலைக்கழக பாடநெறிக்கு உட்பட்டதோ அல்ல. சுயவிருப்பின் அடிப்படையில் பணம் செலுத்தி கற்கும் ஒரு கற்கை நெறி'' என அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இதன்பின்னரே மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பு நடவடிக்

## மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரியவர்கள் விரைந்து செயற்பட வேண்டும்

கழகநிர்வாகம் கவலைப்படவோ அக்கறை கொள்ளவோ இல்லை எனவும் உடற்கல்வி மாணவர் ஒன்றியம் தெரிவிக்கிறது.

3 ஆம் வருடப் பரீட்சைக்கு தோற்றும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த மாணவர்கள், தாம் பரீட்சைஎழுதிவெளியேறியதும்வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில், தமிழ் மாணவர்களின் எதிர் காலத்தில் அக்கறை கொண்ட சில கல்வியலாளர்களுடன் தொடர்பு கொண்டார்கள்.

**கேள்விகளுக்கு விடை காணும் தேவை**

அதன்போது 3 வருடப் பயிற்சி நெறிக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதி உண்டா? என்ற கேள்வி எழுந்தது. அதனைத் தெரிந்து கொள்வதற்கு மாணவர்கள் தமது துறைசார் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்ட போது 3வருடப் பயிற்சிநெறிக்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி இல்லையென்ற பதிலே கிடைத் தது. இதனைக் கேள்வியுற்றதும் மாணவர்களின் வேலை வாய்ப்புப் பற்றிய கனவுகள் கலைந்தன. நாம் எங்கே நிற்கின்றோம்? எமது எதிர்காலம் என்ன? கேள்விகளுக்கு விடைகாண வேண்டிய தேவை மாணவர்களுக்கு ஏற்பட்டது.

இதன் விளைவாகத் தமது கல்விக்கு அங்கீகாரம் பெற்றுத் தரும்படி பல்கலைக் கழக நிர்வாகத்திடமும், பயிற்சி நெறிக் கான பொறுப்பானவர்களிடமும் வேண்டினார்கள். இந்த விடயம் தொடர்பாகத் தம்மால் உடனடியாக எதுவும் செய்ய முடியூாது என்றும் எதிர்காலத்தில் இது சம்பந் தமாக முயற்சித்துப் பார்க்கலாம் என்ற பதில்

கையை ஆரம்பித்தனர். முதலாம் வருடத்தில் இருந்த மாணவர்கள் பரீட்சை எழுதி விட்டு, இரண்டாம் வருட கற்கை நெறியைத் தொடரவில்லை. 3ஆம் வருட கற்கை நெறியை மேற்கொண்டவர்கள் தமது இறுதிப் பரீட்சையை எழுதவில்லை. முதலாம் வருடப் புகுமுகப் பரீட்சையை எழுதியவர்கள் தமது செய்முறைப் பயிற்சியை மேற்கொள்ளவில்லை.

தமக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்களின் பகிஷ்கரிப்புத் தொடர்கின்றது. எனினும் மூன்று மாதங்களுக்கு மேலாக மாணவர்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும், விளையாட்டு உடற் கல்வி அலகிற்குப் பொறுப்பானவர்களும் எதுவும் நடவாதது போன்றே இருக்கின்றார்கள். இன்று உடற்கல்விப் பாடநெறியினைப் பயின்ற பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் நிலைதடுமாறி, அந்தரித்து நிற்கின்றார்கள்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டபோதும் இதுபற்றிக் கருத்துக் கூற அவர்கள் முன்வரவில்லை.

பரிதவிப்போடு, அடுத்தகட்ட வாழ்வுக்காக காத்திருக்கும் பல நூற்றுக்கணக்கான உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையையும், உத்தரவாதத்தையும் வழங்கவேண்டிய பொறுப்பையும், தார்மீகக் கடமையும் பல்கலைக்கழகம் இனியாவது உணர்ந்து, தக்கசெயலில் இறங்கவேண்டும். அந்தக் கடமையிலிருந்து தவறி மாணவர்களின் வாழ்வினைப் பாழாக்கலாமா? ✱

# இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காணவேண்டும் இதுதான் இந்தியத் தலைவர்களினது நிலைப்பாடு

## சென்னையில் ரணில் பேட்டி

சென்னை, நவ. 22

இலங்கை இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்பதே இந்தியத் தலைவர்களது நிலைப்பாடு.



-இவ்வாறு முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் இருந்து திருச்சி செல்லும் வழியில் சென்னை வந்த அவர், செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கை யிலேயே அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:-

டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத்துறை செயலாளர், இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகர், பா.ஜ.க. மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களையும் சந்தித்தேன்.

அவர்களிடம் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமை குறித்து விவரித்தேன். அங்கு இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் விவரித்ததோடு தமிழர்கள் பாதுகாப்பு குறித்து இந்தியத் தலைவர்கள் வலியுறுத்திய கருத்துகளையும் கேட்டறிந்தேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மேற் கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியனவாக உள்ளன.

இந்தியா புறப்படும் முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தேன். அப்போது, வன்னி உள்பட புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் அப்பாவித் தமிழர்களை வெளியேற்றாமல் அவர்களுக்கு உணவு, மருந்து, உறைவிட வசதிகளுடன் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தினேன்.

மேலும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளை அழைத்து முத்தரப்பு பேச்சை நடத்த வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்துவதாகக் கூறப்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா - இலங்கை இடையே 2005இல் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினால் மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் - என்றார்.

## புலவர் பார்வதிநாதசிவத்தின் ''தமிழ்ச் செல்வம்'' நூல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.22

புலவர் ம.பார்வதிநாதசிவம் எழுதிய 'தமிழ்ச் செல்வம்' இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் ஈ.குமரன், பண்டிதர் ந.கடம்பேஸ்வரன் ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை இளவாலை கிராம அலுவலர் பொ.இராசேந்திரம் பெற்றுக் கொள்வார். (204)

## ரயில் பாதையோரங்களில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளை அகற்றுவது குறித்து ஆராய்வு

கொழும்பு,நவ.22

ரயில் வீதியோரங்களில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்புகளை அமைத்துக்குடியிருப்போரை அகற்றுவது தொடர்பாக ஆராய குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவை அமைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது. ரயில்பாதைகளைவிஸ்தரித்து, ரயில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு ரயில் பாதையோரங்களில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்போர் தடையாகவிருக் கின்றனர் என்று போக்கு வரத்து அமைச்சர் டளஸ் அழக பெரும அமைச்சரவைக்குத் தெரிவித்திருந்தார்.

அதற்காக அவர்களை திடீரென அங்கிருந்து அகற்ற முடியாது என்பதால் இது தொடர்பாக ஆராய குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 14 ஆயிரத்து 4 பேர் இதுவரை தே.அ.அட்டை பெறவில்லை

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்.மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை பெறத் தகுதி இருந்தும் கடந்த ஒக்ரோபர் மாதம் வரை 14 ஆயிரத்து 4 பேர் அவற்றைப் பெற்றுக்கொள்ளவில்லை என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை உணர்ந்து 16 வயது பூர்த்தியடைந்த அனைவரும் அதனைக் கட்டாயம் வைத்திருக்கவேண்டும். இதனால் 31.12.2008 இற்கு முன்பு உரித்துடையோர் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டையை வழங்க முயற்சிக்கிறார் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம். இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் ரீதியாக இதுவரை தேசிய அடையாள் அட்டை பெற்றுக்கொள்ளாதவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

| பிரதேச செயலகம் | 'ஒக்ரோபர்' 2008 கிடைத்த விவரம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1,416 |
| நல்லூர் | 622 |
| கோப்பாய் | 2,771 |
| கரவெட்டி | 1,155 |
| பருத்தித்துறை | 300 |
| சண்டிலிப்பாய் | 1,275 |
| சங்கானை | 786 |
| உடுவில் | 2,100 |
| தெல்லிப்பழை | 1,139 |
| வேலணை | 942 |
| சாவகச்சேரி | 381 |
| காரைநகர் | 196 |
| மருதங்கேணி | 144 |
| நெடுந்தீவு | 301 |
| ஊர்காவற்றுறை | 776 |
| | 14,004 |

தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கு முக்கிய ஆவணமான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்கான நடமாடும் சேவை பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களின் அனுசரணையுடன் சகல பிரதேச செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும், உதவிப் பதிவாளர் நாயகத்தினாலும், காணி மேலதிக மாவட்டப் பதிவாளராலும், அப்பிரிவிற்குரிய மேலதிக மாவட்டப் பதிவாளர்களினாலும் நடத்தப்படுகின்றது.

எனவே, சகல பிரதேச செயலர்களும் கிராமசேவையாளர்களின் ஒத்துழைப்புடன் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களின் விண்ணப்பப்படிவங்களை உடனடியாகச் சேகரித்து மாவட்டச் செயலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார். (202)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கரவெட்டியில் முத்திரையிடும் பணி

வடமராட்சி,நவ.22

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நிறுத்தல், அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அடுத்தமாதம் 8ஆம் திகதி வரை நெல்லியடி, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

பிரதேச சபையின் நெல்லியடி உப அலுவலகத்தில் எதிர்வரும் 24, 25, 27, 28ஆம் திகதிகளிலும் மற்றும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் -

உடுப்பிட்டி உப அலுவலகத்தில் அடுத்த (டிசெம்பர்) மாதம் 4, 5ஆம் திகதிகளிலும் மற்றும் 8ஆம் திகதியும் முத்திரையிடும் பணிகள் இடம்பெறவுள்ளன என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை அறிவித்துள்ளது.

நெல்லியடி, உடுப்பிட்டி உப அலுவலகப் பிரிவுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள், சந்தை வியாபாரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் பாவனையில் வைத்திருக்கும் நிறுத்தல், அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இட்டுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-236)

## குடாநாட்டில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,நவ.22

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று மின்சாரம் தடைப்படும் என யாழ்.மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

குடாநாடு முழுவதும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை மின்சாரம் தடைப்படும். (204)

வடமராட்சி கிழக்கிலுள்ள

## வலிக்கண்டி வீட்டுத்திட்டக் கிராம அபிவிருத்திக்கு 50 லட்சம் ரூபா நிதி

வடமராட்சி,நவ.22

வடமராட்சி கிழக்கு, குடத்தனை, வலிக்கண்டி வீட்டுத்திட்டக் கிராமத்தில் சிறுவர் பூங்கா, பொதுமண்டபம், சந்தை என்பன அமைப்பதற்கும் மற்றும் மின்சார இணைப்புக்கும் என 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் எம்.சிறீஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக நாகர்கோவில் தெற்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 55இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு குடத்தனை வலிக்கண்டியில் உள்ள அரச காணியில் உலக வங்கி நிதி உதவியுடன் வீட்டுத்திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டுத்திட்டக் கிராமத்தில் குடியிருக்கும் மக்களின் வசதி கருதியே குறிப்பிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க விருப்பதாக உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (202-236)

## ஆனைக்கோட்டை வைத்தியசாலையில் மரங்கள் நாட்டப்பட்டன

நவாலி,நவ.22

மரம்நடுகைத் திட்டத்தின்கீழ் மானிப்பாய் பிரதேச ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் வை. சந்திரராசா தலைமையில் பல பயன்தரு மரங்கள் நாட்டி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்களும் பல பொதுமக்களும் கலந்துகொண்டனர். (202-100)

## எயிட்ஸ் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டிகள்

வண்ணை,நவ.22

சர்வதேச எயிட்ஸ் தினத்தை ஒட்டி திறந்த கட்டுரைப் போட்டி யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் சேவாலங்கா மன்றத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகிறது.

"யாழ்.மாவட்டத்தில் எச்.ஐ.வி. எயிட்ஸ் அதிகரிப்பைத் தூண்டக்கூடிய சமகால மாற்றங்களும் தடுப்பதற்கான அணுகுமுறைகளும்" என்னும் தலைப்பில் 500 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரைகள் அமைதல்வேண்டும்.

முதல் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 7,500 ரூபாவும் மூன்றாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் மேலும் ஐந்து கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசுகளாகத் தலா 2ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202-160)




"சமகால விஞ்ஞானத்துவ முகாமைத்துவ போக்கும் சவால்களும்' என்ற பொருளில் வவுனியா வளாகத்தில் முதல் தடவையாக நடைபெற்ற வருடாந்த தேசிய ஆய்வு மாநாட்டின் இணைப்பாளர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் உரையாற்றுவதையும், வவுனியா வளாக முன்னாள் முதல்வர் பேராசிரியர் மோகனதாஸைப் பாராட்டி யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் வவுனியா வளாகத் தலைவர் பேராசிரியர் தி.இராசதுரை அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# தொழில் முயற்சியாளர் விருது-2008 யாழ்.மாவட்டத்தில் 41 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 22

கிராமிய கைத்தொழில் மற்றும் ஊக்குவிப்பு அமைச்சின் அனுசரணையுடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசியமட்டத்தில் நடத்திய தொழில் முயற்சியாளர் விருது 2008இற்கு யாழ்.மாவட்டத்தில் 41 பேர் தெரிவாகியுள்ளனர்.

நாளை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள 'ஷில்ப - 2008' வர்த்தக கைத்தொழில் கண்காட்சியில் தெரிவாகியவர்களில் 14 பேர் போட்டியிடவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

**இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள்**

சோமசேகரன் சுகனானந்தா - மைக்றோ பிசிசிஸ்ரம் - யாழ்ப்பாணம், இராஜையா குணசேகர் - ரொப் எறஸ் எலக்ரோனிக்ஸ்- உடுவில், எட்மன் வன்ட்சயந்தன் - நல்லூர்.

**இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள்**

கனகசபை பூர்ணச்சந்திரன் - ஸ்ரார் இன்டஸ்ரியல் சேவிஸ் - நல்லூர், கணேஸ் மோகனதாஸ் - மோகனதாஸ் இஞ்சினியரிங் வேக்ஸ் - நல்லூர், சின்னத்துரை பேரின்பநாயகம் - மலரவன் தொழிலகம்- தெல்லிப்பழை.

**உணவு மற்றும் பானங்கள்**

• சுப்பர் பொன்னையா-அண்ணா தொழிலகம் - உடுவில், பற்குணராசா பாலமுருகன் - அல்பா மிக்சர் - சண்டிலிப்பாய், சுப்பிரமணியம் நிமலேந்திரன் - நாயகிபுர டெக்ஸ் - சங்கானை.

**பாதணி தோல் மற்றும் ஒத்த உற்பத்திகள்**

சிவதாசா சந்திரமேனன்-ஜனா தொழிலகம் கரவெட்டி, கணேசன் கௌதமன் - கரவெட்டி, கந்தையா சந்திரகுமார்- டெனோ தொழிலகம் - சங்கானை.

**இலகு பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில்கள்**

தோமஸ் கிறிஸ்ரின் செல்வராஜன்- நியுட்டா இன்டஸ்ரி - யாழ்ப்பாணம், தவகுலசிங்கம் தவச்செல்வன் - தவம்ஜா அயன் வேக்ஸ் - தெல்லிப்பழை, சண்முகநாதன் விஜேந்திரன் - சண்டிலிப்பாய்.

**தும்பு மற்றும் நார் அடிப்படையிலான உற்பத்திகள்**

சின்னப்பன் குருநாதன்-ஒமேகா மல்ரி புரடக்ஸ் இன்டஸ்ரி-தெல்லிப்பழை, கதிரன் கதிரமலை - சுஜீவன் தும்புத்தொழிலகம் - சங்கானை, இளையதம்பி பாலநேமி - உடுவில்.

**மரம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்திகள்**

ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் - ஆறுமுகம் சிற்பாலயம் - நல்லூர், அகஸ்ரின் வேதானந்தம் - ஆனந்தி அன்கோ- தெல்லிப்பழை, சின்னத்தம்பி தவராசா - ஸ்ரீமுத்துமாரி அம்பாள் மரத்தொழிலகம்-சாவகச்சேரி.

**அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் அடிப்படையிலான உற்பத்திகள்**

சிவஞானசுந்தரம் ராஜ்குமார்- ஹரிகணன் பிறின்டஸ்-நல்லூர், தளையசிங்கம் ஜெயரஜீபன் - அன்றா டியிற்றல் கமெஜ்- நல்லூர், ஆனந்தம் குமாரசாமி - பிள்ளையீார் அச்சகம்-நல்லூர்.

**கனிப்பொருள்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள்**

சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி - பாஸ்கரன் சிற்பாலயம் - நல்லூர், இளையதம்பி ஈஸ்வரன்-சங்கானை, மாரிமுத்து பரமானந்தன்-நல்லூர்.

**இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் அடிப்படையிலான உற்பத்திகள்**

சின்னத்துரை யசோதரன்- யசோ ஆட்ஸ்- நல்லூர், வேலும்மயிலும் ரகுணதாசன்- யாழ்ப்பாணம்.

**கட்டடம் மற்றும் பொருள் அடிப்படையிலான உற்பத்திகள்**

ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் - ஜனா கட்டடப்பொருள் - தெல்லிப்பழை, அம்பிகைபாலன் மோகனராஜன் - சாம கட்டடப் பொருள்- சண்டிலிப்பாய், கந்தசாமி கோபாலசிங்கம்-சங்கானை.

**தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்திகள்**

. வாமதேவன் சோமேஸ்வரி- சிற்றிகணன்ஸ் காமென்ஸ் - உடுவில், தம்பு முருகானந்தம் - ஆகாஸ்ரெயிலறிங் - சாவகச்சேரி, இமாக்கிலற் மோஜோண்- ஜெ.ரி. காமென்ஸ் - யாழ்ப்பாணம்.

**வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள்**

வேலுப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா ஈ.யூ.ரி. லிமிட்டெட் - உடுவில், வேலுப்பிள்ளை பாலேந்திரன் - உடுவில், பற்குணம் அன்ரனராஜ் -அன்ரன் சேவிஸ் அன் மெக்கானிக் சென்ரர்-சண்டிலிப்பாய்.

**சுயதொழில்**

யோசப் யோகராசா-யாழ்ப்பாணம், சின்னையா பொன்னையா-சாவகச்சேரி, கோ. ஜெயரூபன் - சண்டிலிப்பாய்.

## திருத்தப்படாத கோயில்களின் விவரங்கள் சேகரிப்பு

வடமராட்சி,நவ.22

வடமராட்சி கிழக்குப் பகுதியில் திருத்தப்படவேண்டிய கோயில்கள் இருப்பின் அவற்றைப் பற்றிய விவரங்களை விண்ணப்பமாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்டோரை இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் எம்.சிறீஸ்கந்தகுமார் கேட்டுள்ளார்.

இதுவரை பதிவுசெய்யப்படாத கோயில்களையும் பதிவுசெய்துகொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளமார்ந்த நன்றிகள்

சென்ற 18.11.2008 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற

எமது அன்புச் செல்வங்கள்

**சர்வஜித், பூர்வஜாவின்**

ஆயுஷ்ய ஹோம வைபவத்தில் கலந்து வாழ்த்தியோருக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியோர்களுக்கும், இவ் வைபவம் சிறப்புற நடைபெற முன்நின்று செயற்பட்ட சுன்னாகம் சிவன்கோயில் தொண்டர் இளைஞர்களுக்கும், எமது மனமார நன்றிகளைத் தெரிவித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சுபம்

கதிரமலை சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.
(C/555713)

சிவஸ்ரீ.ச.ஸ்ரீகாந்தக்குருக்கள்
சுபாங்கினி தம்பதிகள்.


### வேலை ஆள்கள் தேவை

அனைத்துவெதுப்பகவேலைகளும்தெரிந்த அனுபவமிக்க மின்வெதுப்பியும் இயக்கக் கூடிய வேலை ஆள்கள் தேவை.

காங்கேயன் வெதுப்பகம்,
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
(80073)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 24.11.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(80072)


## கண்ணீர் அஞ்சலி



*எமது ஆங்கில ஆசிரியர்*
*செல்வராஜா சுரேஸ் அவர்களின்*
*அன்புச் சகோதரன்*

**செல்வராஜா சதீஸ்**


(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வலி.தென்மேற்குப் பிரதேச செயலகம்)

*அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுத் துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.*

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.
(சா/555703)

தரம் 10B, 11B
மாணவர்கள் (2008).

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**கந்தையா அமிர்தலிங்கம்**

*(ஓய்வுபெற்ற ஊழியர்,*
*போதனா வைத்தியசாலை)*

தோற்றம்
05 * 12 * 1929

மறைவு
22 * 11 * 1998

அன்பின் உறைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
அன்போடு எம்மைக் காத்த தெய்வமே!
பத்து ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டகலாது.

*கிரிஷாந்தன் பேக்கரி,*
*15/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
(80074)

மகள், குடும்பத்தினர்
(அ.புஸ்பகுமார்).


## இதோ உங்களுக்காக...!

### MONITOR
**LCD**
- 15.6" Panora - 15,500/=
- 15" Acer - 15,500/=
- 17" Panora - 19,250/=
- 17" View Sonic - 19,900/=
- 19" View Sonic - 22,500/= (multimedia)

**CRT**
- 15" LG - 12,250/=
- 17" ViewSonic Flat -16,000/=

### ACCESSORIES
- Recovery Card - 1,900/=
- Internal TV Card - 3,000/=
- TV Combo Box - 3,000/=
- Web Cam - 1,900/=
- Casing - 4,200/=
- FM Modulator - 2,500/=
- Modem - 950/=
- 3 in 1 Steering wheel - 5,250/=
- Bluetooth - 1,000/=
- Optical Mouse - 500/=
- Ball Mouse - 350/=
- Ide to Sata Converter - 1,100/=
- ATX PowerSupply - 1,950/=
- Multi Laptop Changer - 3,750/=

### UPS
- Panora 650A - 5,500/=
- Power Tree 650W - 5,750/=
- Prolink PC650 - 5,800/=
- Personal - 6,100/=
- DCP (auto shutdown) - 6,200/=
- PowerTree 1.2KV - 13,000/=

### PRINTER
- HP D1460/1560 Color- 4,400/=
- Samsung ML1640LaserJet-12,500/=
- Samsung ML2010 LaaserJet-13,250/=
- HP 1005 LaserJet - 13,250/=
- Epson LQ300+11 - 20,900/=
- Epson LX300+ - 19,900/=
- HP 4355 All in one - 16,250/=
- Color Laser Jet - 36,000/=
- 3 in 1 Laser Jet - 39,000/= (Photocopy,Scanner,Printer)

### RAM
- Kingston DDR11 512MB - 1,300/=
- Kingston DDR11 1GB - 1,750/=
- Kingston DDR11 2GB - 3,600/=
- Kingston DDR1 512MB - 2,700/=
- Kingstone DDR1 1GB - 4,200/=
- SD Ram 128Mb - 950/=

### SCANNER
- Canon Lide25 - 5,900/=
- HP 2410 - 9,250/=
- Negative scanner-10,900/=

### MOTHER BOARD
- 478 Mother Board -6,000/=
- LGA DDR1 - 6,750/=
- Foxconn G31MX-K - 5,700/=
- Intel D31 DDR11- 8,000/=

### VGA CARD
- Pci Express 512Mb - 5,600/= MX8400 GS
- AGP 128MB - 4,300/=
- AGP 256MB - 5,250/=

### DVD WRITER
- Samsung 22x Sata - 3,200/=
- CD Writer IDE - 2,700/=
- Samsung Combo Sata- 2,700/=

### WOOFER
- Ego3nity 2.1ch - 3,300/=
- MicroLap 2.1ch - 3,600/=
- Creative sbs380 2.1ch-4,100/=
- MicroLap 5.1ch - 7,400/=
- Multimedia Speaker - 650/=

### HARD DISK
- 80GB Maxtor Sata- 4,900/=
- 160GB Maxtor Sata-5,300/=

### SONY MP3 PENDRIVE
* 1GB * FM Radio
* Pendrive * Head Phone
* MP3 * External Micro SD
* Voice Recording Solt

4,250/=

### ORANGE MP4 PLAYER
* MP4 * Voice Recording
* MP3 * Head Phone
* FM Radio * Power Changer

1GB - 4,500/= 2GB - 5,500/=

### PEN DRIVE
- 2GB - 850/=
- 4GB - 1,100/=
- 8GB - 1,950/=
- 16GB - 4,850/=
- 32GB - 6,950/=

### MP3 PLAYER
* 1GB
* MP3
* USB Cable
* Head Phone

2,500/=

* 2GB
* MP3
* USB Cable
* Head Phone

3,000/=

### MP4 PLAYERS (Sony)
*1GB (Expand 2 GB)
*Camara *FM Radio
*MP3 *Games
*Voice Recording
*USB Cable *Power Charger
*Head Phone *Driver CD

1GB - 8,500/= 2GB - 9,500/=

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 8554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)
Valued For One Week


## மரண அறிவித்தல்

### *திருமதி கார்த்திகேசு பூமணி*



வண்ணார்பண்ணை வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி சந்தனமாதா கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு பூமணி 19.11.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் செல்லப்பா - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சின்னமணி, இராசையா மற்றும் சீவரத்தினம் (கொழும்பு), திருமதி ஆசைக்கிளி, திருமதி மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் நாகரத்தினம், சரஸ்வதி (லண்டன்), இராசகோபால், பரமசிவம் (பிரான்ஸ்), ஜெயபதி (சுங்க இலாகா, கொழும்பு), சிறிஸ்கந்தராசா, நவீந்திரன் (பிரான்ஸ்), கெங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பராசக்தி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, யோசப்மணி மற்றும் ஜெயமலர், புஸ்பராணி (பிரான்ஸ்), சி.புஸ்பராணி, மாலினி (பிரான்ஸ்), குலராஜா (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் அரவிந்தன் (பிரான்ஸ்), அருந்ததி (கொழும்பு), சியாமா (பிரான்ஸ்), வசந்தன், யோன்சன், ஜெயன், டென்சன் (பிரான்ஸ்), செல்வி (லண்டன்), சுரேஸ் (லண்டன்), சுவேந்தினி (சுட்டா - பிரான்ஸ்), ரேணுகா, ரதிக்கா (பிரான்ஸ்), தேசீசன் (மலேசியா), பிருந்தா, திவ்வியா (பிரான்ஸ்), வேணுஜா (O.L.R, வித்தியாலயம்), நிதீசன், நிவேதா, நிருசிக்கா (பிரான்ஸ்), டிலக்ஸ்சன் (கொழும்பு), கோபி (லண்டன்), பிரியதர்ஷினி, துதிராஜ் (கனடா), பாதுஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 14, சந்தனமாதா கோயில் வீதி,*
*பாண்டியன் தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*
(80080)

மக்கள்,
பிள்ளைகள்,
மருமகன்.

## 7ஆம் நாள் நினைவில்



அமரர்
**செல்வராஜா சதீஷ் (S.D.O)**

*(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்)*

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவன் - நவாலியூர்

**செல்வராஜா சதீஷ்**

**(Diploma in Management- OUSL)**

அவர்களின் திருமண வைபவம் 15.11.2008 அன்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெற்று இனிதே நிறைவேறி, மறுநாள் மணப்பந்தலில் தனது உற்றார், உறவினர், ஆருயிர் நண்பர்களுடன் மகிழ்ந்திருந்த வேளையில், 16.11.2008 அன்று ஞாயிற்றுக் கிழமை திடீரென நோயுற்று, யாழ். மருந்துவமனையில் சேர்க்கப்பட்டவேளை இறையடி சேர்ந்த செ.சதீஷ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி!

- திருமதி நவரத்தினம் இந்திராணி (சிறியதாய்)
- செல்வி இந்துஷா நவரத்தினம் (சகோதரி)
- திரு.திருமதி நரேந்திரன் - ஜோய்லின் (தம்பி - அண்ணி), கிஷோபன் (மகன்)
- திருமதி விஸ்வலிங்கம் அமிர்தகுரபி (குஞ்சியம்மா)
- திரு.திருமதி இளங்கோ பாலகௌரி (சின்னமாமா - சின்னமாமி).

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(80075)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து-ஆஸி. டெஸ்ட் போட்டியில் ஓட்டம் குவிக்க இரு அணிகளும் திணறல்!

அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் முதலாவது டெஸ்ட்போட்டி அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேரினில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இப் போட்டி இடம்பெறும் மைதானம் பந்து வீச்சாளர்களுக்கே சாதகமாக இருப்பதால் ஓட்டங்கள் குவிப்பதற்கு இரு அணி வீரர்களும் தடுமாறுகின்றனர்.

நேற்று இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த நியூஸிலாந்து அணி ஆட்டம் தொடங்கும் போது 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ரெட்மன் 3 ஓட்டங்களுடன், கௌப் 2 ஓட்டங்களுடனும் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தது. எனினும் நேற்று ஆட்டம் ஆரம்பித்ததுமே ரெட்மன் 2 ஓட்டங்களுடன் கிளார்க்கின் பந்தில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம் புகுந்தார் ரைடர். இருவரும் இணைந்து தமக்கிடையை 37 ஓட்டங்களைப் பகிந்தனர். இந்நிலையில் 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த கௌப் பிரட்லியின் வேகத்தில் போல்ட் ஆனார்.

தொடர்ந்து ரைடருடன் ஜோடி சேர்ந்தார் ரெயிலர். அவர்களது கூட்டும் அதிகம் நிலைக்கவில்லை. அவர்கள் இருபது ஓட்டங்களைப் பகிர்ந்தபோது 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெயிலர் வட்சனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் ஹடினிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவரின் பின்னால் நியூஸிலாந்து அணியின் விக்கெட் காப்பாளர் மக்கலம் களம் புகுந்தார். அவரும் 8 ஓட்டங்களுடன் ஜோன்சனின் பந்தில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

அவரது ஆட்டமிழப்பை அடுத்து ரெயிலருடன் இணைந்து கொண்டார் பிளையின். இவர்களும் தமக்கிடையே 35 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். அப்போது நிதானமாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ரெயிலர் 40 ஓட்டங்களுடன் பிரட்லியின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து எலியொட் வந்தார். அவரும் களமிறங்கி சிறிது நேரத்தில் 9 ஓட்டங்களுடன் வட்சனின் பந்து வீச்சில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்து வெளியேறினார்.

அவரின் பின்னால் அணித் தலைவர் விற்றோரி களமிறங்கினார். அவரும் 2 ஓட்டங்களுடன் ஜோன்சனின் பந்தில் சைமண்ஸிடம் பிடிகொடுத்து பெபிலியன் திரும்பினார்.

அப்போது அணியில் மொத்த ஓட்ட எண்ணிக்கை 143 ஆக இருந்தது.

அவரையடுத்து வந்தவர் சௌதி. அவரும் அதே ஓட்ட எண்ணிக்கையிலேயே ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் ஜோன்சனின் பந்து வீச்சில் சைமண்ஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து பிறையன் களமிறங்கினார். அவரும் ஓர் ஓட்டத்துடன் ஜோன்சனின் பந்து வீச்சில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக வந்தவர் மார்டின் இவரும் ஓர் ஓட்டத்தைப் பெற்று கிளாக்கின் பந்தில் போல்டானார். அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. அப்போது நியூஸிலாந்து அணி 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தனது நிதானமான துடுப்பாட்டத்தினால் பிளைன் 39 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இதன்படி முதலாவது இன்னிங்ஸ் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 58 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது.

பந்து வீச்சில் அவுஸ்ரேலியா அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய ஜோன் சன் 4 விக்கெட்டுகளையும் பிரட்லி, ஸ்ருவேட் கிளாக், வட்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக ஹைடன், கடிச் ஆகியோர் களம் புகுந்தனர். அணியின் முதலாவது விக்கட் ஓட்டமெதுவும் பெறப்படா நிலையில் வீழ்த்தப்பட்டது.

மத்யூஹைடன் ஓட்டம் எதுவும் பெறாமல் மார்டினின் பந்து வீச்சில் மக்கலத்திடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து கடிச்சுடன் இணைந்து கொண்டார். அணித்தலைவர் பொண்டிங் இவர்கள் இருவரும் தமக்கிடையே 40 ஓட்டங்களைப் பகிர்ந்து இருந்த நிலையில் பொண்டிங் 17 ஓட்டங்களுடன் பிறையனின் பந்தில் ரெட்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்தார் மைக்கசி. எனினும இவர் ஓட்டம் எதுவும் பெறாமலேயே பிறையனின் பந்தில் விக்கட் காப்பாளர் மைக்கலத்திடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவரின் பின்னர் வந்தார் மைக்கல் கிளாக். அவரும் 9 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஓட்டமெடுக்க முனைந்த போது ரெட்மனினால் ரண் அவுட் முறையில் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த கடிச்சுடன் இணைந்து கொண்டார் சைமண்ட்ஸ்.

இந்தக் கூட்டு ஓரளவுக்கு நிலைத்தது. தமக்கிடையே 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 20 ஓட்டங்களுடன் சைமன்ஸ், மார்டினின் பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் வட்சன் களம் புகுந்தார். அவரும் 5 ஓட்டங்களுடனும் மார்டினின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் வந்தவர் ஹடின் மறுமுனையில் இருந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கடிச் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்போது கடிச் 67 ஓட்டங்களுடனும், ஹடின் 6 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர். பந்த வீச்சில் மார்டின் 3 விக்கெட்டுகளையும் பிறையன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். மூன்றாம் நாள் ஆட்ட இன்று தொடரும்.

## யாழ். நகரில் நேற்று ஏ-32 வீதி வெற்றி விழா

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். நகரத்தை அண்டிய கரையோரப் பகுதிகளில் உள்ள கடல் தொழிலாளர்கள் இணைந்து ஊர்வலம் ஒன்றை நேற்று காலையில் நகரில் முக்கிய வீதிகள் ஊடாகவும் நடத்தினர்.

ஏ-32 வீதி பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் வந்ததைக் கொண்டாடும் முகமாக இந்த வெற்றிவிழா ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் குருநகர், நாவாந்துறை மற்றும் பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பல நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர்.

குருநகர் பகுதியில் ஆரம்பித்த ஊர்வலம் கண்டி வீதி வழியாக சத்திரச் சந்தியை அடைந்து, ஆஸ்பத்திரி வீதி வழியாக நாவாந்துறையை அடைந்தது. பின் முஸ்லிம் வீதி, நாவலர் வீதி வழியாக சென்றது.

ஊர்வலம் பரமேஸ்வராச் சந்தியை அடைந்து பலாலி வீதி முதலாம் குறுக்கு வீதியூடாக பகல் 12 மணியளவில் பிரதான வீதியை மீண்டும் வந்தடைந்தது.பல நூற்றுக் கணக்கானவர்கள் கால் நடையாகவும், சைக்கிள்களிலும் தேசியக் கொடிகளுடன் அமைதியான முறையில் சென்றனர். முன்னரங்கில் ஏ-32 வீதியை கைப்பற்றிய வெற்றி விழா என்ற பெரிய பதாகை எடுத்துச் செல்லப்பட்டது. தேசிய கொடி தாங்கிய ஒலி பெருக்கி பூட்டப்பட்ட ஓட்டோ வாகனம் ஊர்வலத்தை வழி நடத்திச் சென்றதைக் காணமுடிந்தது. (அ-302-224)

## சாவகச்சேரி நகரசபையில் இன்றுவரை புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.22

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி சாவகச்சேரி நகர சபை வளாகத்தில் புத்தகக் கண்காட்சி கடந்த வியாழக் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து மூன்று தினங்கள் (இன்று வரை) புத்தகக் கண்காட்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியினை யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி அ.வசந்தகுமார் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேசச் செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் நகர்ப்பகுதி பாடசாலைகளின் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ-207)

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம் பெறும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் -

இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில்-

யாழ்ப்பாணம் பாடும்மீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் மோதவுள்ளது. (அ-86)

## யாழ். ஆஸ்பத்திரியில் படையினர் பணியில்

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் தென்னிலங்கை டாக்டர்களின் பாதுகாப்புக் கருதி நேற்று தொடக்கம் படையினர் கடமை யாற்றத் தொடங்கினர்.

மட்டக்களப்பு நாவற்காடு வைத்தியசாலையில் கடமை யாற்றிய பெரும்பான்மையின வைத்தியர் ஒருவர் இனம் தெரியாத ஆயுத தாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி பலியானதன் பின்னணியில் இந்த நடவடிக்கை யாழ்ப் பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்திய சாலைகள், மாவட்ட வைத்திய சாலைகளில் கடமையாற்றும் தென்னிலங்கை வைத்தியர்கள் தமது பாதுகாப்பு சம்பந்தமாக கோரிக்கை விடும் சந்தர்ப்பத்தில் அந்த வைத்திய சாலைகளுக்கும் படைத்தரப்புப் பிரிவின் பாதுகாப்பு உதவி வழங்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

(அ-68)


## கண்ணீர் அஞ்சலி

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் தற்போதைய இயக்குநர் சபை உறுப்பினருமாகிய திருநாவுக்கரசு தேவராஜா அவர்களின் அன்புச் சகோதரன்

அமரர் திருநாவுக்கரசு வரதராஜன்

அவர்களின் திடீர் மறைவினால் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

7ஆம் கட்டை, சண்டிலிப்பாய். (80078) இயக்குநர் சபை, பணியாளர்கள்.


## சோமாலிய கடற் கொள்ளையர்களின் கப்பல் மீது இந்திய கடற்படை தாக்குதல்

கோலாம்பூர், நவ. 22

சோமாலியக் கட்டல் கொள்ளையர்களின் கப்பல் மீது இந்தியக் கடற்படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தியமை குறித்து சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் கடல் கொள்ளை தடுப்புக் கண்காணிப்புக் கழகம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

ஏடன் வளைகுடா பகுதியில் சோமாலியா கடற் கொள்ளையர்களின் கப்பல் மீது இந்தியக் கடற்படைக் கப்பல் தாக்குதல் நடத்தியது. இதில் கொள்ளையர்களின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இந்தியக் கடற் படையின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பல் வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். மலேஷியாவிலுள்ள சர்வதேசக் கப்பல் போக்குவரத்து மற் றும் கடல் கொள்ளைத் தடுப்புக் கண்காணிப்பகமும் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் நோயல் சூங் கூறியவை வருமாறு:-

இந்தியக் கடற்படைக்கப்பல், கடல் கொள்ளையர்களின் கப்பலை மூழ்கடித் தமை மகிழ்ச்சியை அளிப்பதோடு, நம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற நடவடிக்கைக்காகவே அனைவரும் நீண்ட நாள்களாக காத்திருந்தோம். இந்தியக் கடற்படை சரியான நேரத்தில் சரியாக செயற்பட்டுள்ளது.

கடற் கொள்ளையர்களின் அட்டகாசத்தை இனிமேலும் தொடர அனுமதிக்கக்கூடாது. ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமுதாயமும் கடல் கொள்ளையர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க சரியான தீர்வுகாண வேண்டும் - என்றார்.

இது குறித்து அமெரிக்க கடற்படை அதிகாரி மைக் முல்லேன் கூறியுள்ளவை வருமாறு:-

கடல் கொள்ளையர்களை பிடித்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி உள்ளதா என்று கேள்வி இப்போது எழுந்துள்ளது. நீண்டகாலமாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாமல் உள்ளது. கடல் கொள்ளையைத் தடுக்க சர்வதேச சமுதாயம் முன்வரவேண்டும், கடல் கொள்ளையர்களைப் பிடித்து அவர்களைத் தண்டிக்கும் வகையிலான சட்ட வரைமுறைகளை உருவாக்க வேண்டும். இதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண் டும். ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸிலில் இது குறித்து தீர்மானம் நிறைவேறுவதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

சமீபத்தில் சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான மிகப் பெரிய எண்ணெய் கப்பலை கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.இவ்வளவு பெரிய கப்பலை கடத்திச் செல்வது என்பது சாதாரண விடயமல்ல, கடற் கொள்ளையர்களின் திறமை ஆச்சரியம் அளிக்கிறது. அமெரிக்காவினால் மட்டும் இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது. இது சர்வதேச பிரச்சினை. அனைத்து நாடுகளும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 ✶ 12 ✶ 1975



மறைவு 22 ✶ 11 ✶ 2002

திருமதி பத்மமாலினி சத்தியலிங்கம்

ஆண்டுகள் ஆறு ஆனாலும்
அன்பு கொண்ட உம் உள்ளம்
கூடி வாழ்ந்த நாள்களை எண்ணிக்
கண்ணீரால் நனைகின்றோம்.

தகவல்: சு.பத்மநாதன், கோவளம், காரைநகர்.

பிரிவால் துயருறும்: அப்பா மற்றும் சகோதரர்கள்.

(80069)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவுக்கு அல் - குவைதா மிரட்டல்

காபூல், நவ.22

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒபாமாவுக்கு மிரட்டல் விடுத்திருக்கும் அல்- குவைதா தீவிர வாத அமைப்பின் தளபதி அல் - ஜவாஹிரி, ஒபாமாவை அடிமை நீக்ரோ என்று வர்ணித்து அர்ச்சனை செய்திருக்கிறார்.

ஒபாமா அண்மையில் வழங்கிய ஒரு பேட்டியில் ஈராக்கில் இருந்து இராணுவத்தைத் திரும்பப்பெற்று ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்போவதாகவும் தீவிர வாதிகளை ஒடுக்கும் வரை ஓயமாட்டோம் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் இஸ்ரேலுக்கு ஆதரவாக செயல்படுவோம் என்றும் அவர் கூறினார்.இது அல் - குவைதா தீவிர வாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒபாமா வெற்றி பெற்றதுமே, அப்கானிஸ்தானிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தலிபான்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பிற்குமாறாக ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் இராணுவத்தை அனுப்புவோம் என்று ஒபாமா கூறியிருப்பது தலிபான் தீவிரவாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

பின்லேடனின் வலது கரமாகத் திகழும் அல் - ஜவாஹிரி இது குறித்து உரை நிகழ்த்திய 11 நிமிட சீடி ஒன்று இணையத் தளத்தில் வெளியாகியுள்ளது.

அதில் அல் - ஜவாஹிரி ஒபாமாவைப் பார்த்துப் பேசுவது போல காட்சி பதிவாகியுள்ளது. அந்த உரையாடல் விவரம் வருமாறு:-

முஸ்லிம் தந்தைக்குப் பிறந்த போதிலும் நீங்கள் (ஒபாமா) தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாக இருக்கிறீர்கள். நீங்கள் இன்னமும் கறுப்பு அடிமை நீக்கிறோவாக இருக்கிறீர்கள். மரியாதைக்குரிய கறுப்பு அமெரிக்கர்கள் மால்கம் எக்ஸ் போன்றவர்களுக்கு எதிரானவர்களின் பிரதிநிதியாக நீங்கள் இருக்கிறீர்கள்.

ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் இராணுவத்தை அனுப்பப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள், அனுப்புங்கள், அங்கு உங்களுக்கு மிகப் பெரிய தோல்வி காத்திருக்கிறது. ஆப்கானிஸ்தான் நாய்களுக்கு உங்கள் வீரர்களின் தொடைக் கறிகள் சுவையாக இருக்கும்.

முஸ்லிம் மண்ணில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேறும் வரை அதை இஸ்லாமிய போராளிகள் தாக்கிக்கொண்டே இருப்பர். புனிதப் போராளிகளின் புதிய எழுச்சியை நீங்களும் (ஒபாமா), உங்கள் அரசும் நாடும் ஏற்க மறுக்கிறது.

தேர்தலில் நீங்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட பின்பும் கூட அமெரிக்கா தன் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வில்லை. முஸ்லிம்களை ஒடுக்குவதை நிறுத்திக்கொள்ள வில்லை.அமெரிக்காவுக்கு புதிய முகம் கிடைத் திருந்திருக்கிறது. ஆனால், நெஞ்சு முழுவதும் நஞ்சுதான். பேராசையால் திரும்பிய திசையெல்லாம் தீமைகளை பரப்பிக்கொண்டு இருக்கிறது - என்றுள்ளது.

## 2006ஆம் ஆண்டுக்கு முன்னர்
# இடம்பெயர்ந்தோருக்கான நவம்பர் மாத நிவாரணம் இப்போது வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 22

கடாநாட்டில் 2006- ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நவம்பர் மாத நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருவதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழான நிவாரணம் 2006 ஓகஸ்ட் மாதத்திற்கு பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒக்ரோபர் மாதத்துக்குரியவை வழங்கப்படுவதாகவும்-

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதும் நவம்பர் மாதத்திற்கான விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்றும்- அரச அதிபர் தெரிவித்தார்.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கான சமுர்த்தி பயனாளிகளுக்கான நிவாரண விநியோகம் இப்போது நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# பாகிஸ்தான் எல்லையில் ஏவுகணைத் தாக்குதல் தீவிரவாதிகள் அறுவர் பலி; 7 பேர் காயம்

இஸ்லாமாபாத், நவ. 22

ஆப்கானிஸ்தான் நாட்டை ஒட்டிய பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்த்தான் பகுதியில் கடந்த புதன்கிழமை திடீர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் ஆறு தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இவர்களில் 2 பேர் துர்க்மேனிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என செய்தி வெளியாகி உள்ளது.

இந்தத் தாக்குதலை அமெரிக்கப் படையினரே நடத்தியிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. எனினும் இது குறித்து பாகிஸ்தான் தரப்பில் எவ்வித தகவலும் வெளிவரவில்லை.

வடக்கு வஜிரிஸ்தான் பழங்குடியின மக்கள் வாழும் பகுதியில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதைப் பாகிஸ்தான் அரசு அலுவலர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனால், தாக்குலில் உயிரிழந்தவர்கள்மற்றும்அவர்களின் விவரம்போன்றவற்றை அவர்கள் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்புப் படை பாகிஸ்தான் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் வலுவாக உள்ள தலிபான்களை ஒடுக்க வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டுகிறது. இதற்காக பாகிஸ்தான் அரசையும் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்னராக அமெரிக்கப் படையே அப்பகுதியில் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தியது. இதை பாகிஸ்தான் வன்மையாகக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது.

### 64 லொறிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் 125 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அடங்கிய 12லொறிகளும் 1லட்சத்து 6ஆயிரம்லீற்றர் மண்ணெண்ணெய் அடங்கிய 8லொறிகளும்வன்னியைச் சென்றடைந்தன. உலக உணவுத் திட்டத்தினால் அனுப்பப்பட்ட லொறிகளில் 30 உணவு லொறிகளும் கிளிநொச்சிக்கும், 14லொறிகள் முல்லைத்தீவுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக நேற்று ஓமந்தைச் சோதனைச் சாவடி திறந்திருந்தது. (அ-சி)

### பாணின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறாத்தல் பாணின் விலையும் 3 ரூபாவாக குறைக்கப்படுவதாக அரச அதிபர் தெரிவித் தார். அதன் பிரகாரம் இன்று தொடக்கம் ஒரு இறாத்தல் பாணின் விலை 45 ரூபாவாக இருக்கும். பேக்கரி உரிமையாளர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்றும் -

ஏனைய பேக்கரி பொருள்களின் புதிய விலைகளை நிர்ணயிப்பது குறித்து விரைவில் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் - அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

# சர்வதேச மட்டத்தில் டீசல் விலை வீழ்ச்சி

பெற்றோலிய வகைகளின் விலைகள் சர்வதேச மட்டத்தில் குறைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது. டீசலின் விலை பீப்பா ஒன்றுக்கு 50 அமெரிக்க டாலர்களாக வீழ்ச்சிகண்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் டீசலின் விலை பீப்பா ஒன்றுக்கு 147 அமெரிக்க டொலர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. உலகப் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் எரிபொருளுக்கான தேவையும் மிக மோச மாகக் குறைந்துள்ளது.

'எப்போதும் இல்லாத அளவுக்கு உலக பொருளாதாரத் துறையில் நம்பிக்கையீனம் அதிகரித்திருப்பதையே பெற்றோலிற்கான வீழ்ச்சியை காட்டுகிறது' என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### அரசைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் செயலகம் வரை அவர்கள் பேரணியாகச் சென்றனர். அங்கு கண்டனக் கூட்டம் வன்னி மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் நா.அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வன்னியில் இலங்கைப் படையினரின் ஒடுக்குமுறையால் மக்கள் படும் அவலம் தொடர்பிலான மனு கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான்கி மூனுக்கும் மனு அனுப்பப்பட்டுள்ளது. இதேவேளை ஒட்டுசுட்டானில் உள்ள சந்தியில் தொடங்கிய கண்டனப் பேரணி உதவி அரச அதிபர் செயலகத்தில் முடிவடைந்தது.

அரசின் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பட்டினங்களிலும் நேற்று மக்கள் பேரணி நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (அ-சி)

### வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைய வடக்கு யுத்தம் காரணமாக அங்குள்ள 190 பாடசாலைகளைச் சேர்ந்த 55 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்கள் வவுனியாவில் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை அம் மாணவர்களுக்கு உடன் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கில் எட்டு வருடங்களுக்கு மேலாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை யாற்றுபவர்களை நிரந்தரமாக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல் முன்பள்ளி ஆசிரியர்களும் போதிய கொடுப்பனவின்றிக் கடமையாற்று கின்றனர். அவர்களுக்குப் போதுமான கொடுப்பனவைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-சி)


## விற்பனையாகிறது

தேசிய கல்விக் கல்லூரிக்கான விண்ணப்பப் படிவம்- (புதியது) முழுமையான வர்த்தமானியுடன் விற்பனையாகிறது.

நாளை நடைபெறவிருக்கும் தேர்தல் திணைக்கள முகாமை உதவியாளர்களுக்கான

★ வழிகாட்டி- நூல்- 300/=
P.உமாசங்கர்
(மிக அண்மைக்கால கடந்தகால வினாக்கள் விடையுடன் நாளைய எதிர்பார்க்கை வினாக்களும் இணைக்கப்பட்டுள்ளது)

★ கைநூல்
P.கமலதாஸ்- 90/=

A/L - BIO SCIENCE
A/L - MATHS, SCIENCE
MARKING SCHEME - 2008

பூபால சிங்கம் புத்தகசாலை
இல, 4, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P 021 222 6693, 2422


## கண்ணீர் அஞ்சலி



எங்கள் நிறுவனத்தின் அச்சக முகாமையாளர் இ.கார்த்திகேசன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கநாச்சியார் இராமசாமி**

அவர்களின் மறைவினால் துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காலஞ்சென்ற அம்மையாரின் ஆத்மா சாந்தியடைந்து எல்லாம் வல்ல இறைவன் நீழலை அடையப் பிரார்த்திக்கிறோம்.

உதயன், யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர், பணியாளர்கள்.

# நகரில் நகைக்கடை மீது குண்டு வீச்சு

யாழ்நகரில் உள்ள பிரபல நகைக்கடையின் மீது நேற்று நண்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் கைக்குண்டை வீசிவிட்டு தப்பிச்சென்றனர்.

நண்பகள் 12மணியளவில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடைகளில் ஒன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்ட போதிலும் அது வெடிக்கவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்த பாதுகாப்பு படையினர் வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டை மீட்டுச் சென்றனர். யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-1)

### சீரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்மா ஜோதீஸ்வரசர்மா, நிர்வாகிகளான கந்தையா சற்குணராசா,தியாகராசா நடராசா, வழிப டுவோரான குணராசா பிரணவன், பேரின்பநாதன் பரமநாதன் ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான எம்.றெ.மேடியஸ், எஸ்.தவபாலன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ-1)

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான கூடாரங்கள் போன்றவற்றைக் கொண்டு செல்வதற்கு வவுனியாவில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

**கிடுகுகளுக்குப் பற்றாக்குறை**

இதன் காரணமாக வன்னியில் உள்ள பொருள்களைப் பயன்படுத்தியே இவற்றை அமைக்க வேண்டியுள்ளது.

வன்னியில் உள்ள 6 விநியோகஸ்தர்களால் 5 ஆயிரம் தங்குமிடங்களை ஏற்படுத்துவதற்கான மரங்களை வழங்க முடியும். எனினும் கிடுகுகளுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து தேவைப்படும் கிடுகுகளைக் கொண்டுவருவதற்கு நூற்றுக்கு மேற்பட்ட லொறிகள் தேவையென அரச அதிபர் மதிப்பிட்டுள்ளார்.

**தொற்றுநோய்கள் பரவுகின்றன**

கிளிநொச்சி மாவட்டத்தில் 16 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்84 பேர் ஒக்ரோபர் மாதம் வாந்திபேதி தாக்கத்திற்கு உள்ளாகினர் என்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இது தவிர வேறு பல தொற்றுநோய்களும் காணப்படுகின்றன.

வன்னியில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் நீரினால் பரவும் நோய்களும் தொற்றக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து வவுனியாவில் உள்ள மனிதநேய அமைப்புகளை இவ் விடயத்தில் உதவுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கோரியுள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

### கப்பம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சூழலை ஏற்படுத்துவதுடன் தொடர்ந்தும் தமது ஏமாற்று வித்தைகளை மக்கள் மத்தியில் தொடர்வதுமாகும்.

இவ்வாறு தொலைபேசி மூலம் மிரட்டிய பலர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் வழிவகுக்கப் பட்டது.

உங்கள் உடைமைகள் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினராலோ சூறையாட முற்படுமானால் அதற்கெதிராக செயற்பட உங்களுக்கு உரிமையுள்ளது. மேலும் யாரேனும் உங்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து கப்பம் கோரினால் அஞ்சாது கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பாதுகாப்புப் படையினருக்கு அறிவியுங்கள். அழைப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் அது பற்றி ஆராய்ந்து உங்கள் வாழ்வையும் உங்கள் உடைமைகளையும் பாதுகாத்து கப்பம் கோருவேரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

பாதுகாப்புப் படையினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது உங்கள் பாதுகாப்பைக் கருதி, இதன் மூலம் பயன் பெற்று பயங்கரவாதமற்ற யாழ். குடா நாட்டைக் கட்டியெழுப்பப் பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

**தொலைபேசி இலக்கங்கள்:**

நகரப் பாதுகாப்பு படை தலைமையகம் 060 221 5016, 52ஆவது படையணி தலைமையகம் 060 221 1251, 060 221 1252, 511 ஆவது படை தலைமையகம் அச்செழு 021 222 5360, 512ஆவது படை தலைமையகம் அரியாலை 060 221 4627, 513ஆவது படை தலைமையகம் உடுவில் 060 221 2204, 524ஆவது படை தலைமையகம் பருத்தித்துறை 021 226 3672 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும் - என்றுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.